மனிதமே முதன்மை!

# முற்றம்


பல்சுவை இதழ்

Mutram monthly October 2014

விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 10 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி




## ஏழைகளின் மருத்துவர்
## கின்னஸ் புகழ் ச. பாஸ்கரன்


Anantha
FESTIVAL OFFER
Upto
30% off
Conditions apply.
An ISO 9001 : 2000 Company
www.anantha.info
Meena Stores - Viruthachalam

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly October 2014

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம்.ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**பி.எம்.பாலா**
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**A.அமல்ராஜ்**
**சு.ஏழுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
**க. பவானி** பி.ஏ.,
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**V.கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
**இணைய தளம் :**
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

இட்டார் பெரியோர் *(தலையங்கம்)* ....................4

சமூக ஆர்வலர் – ஏழைகளின் மருத்தவர் –
கின்னஸ் புகழ் – ச. பாஸ்கரன்
*பேராசிரியர் அப்பாத்துரை*....................5

சீத்தாப்பழங்களின்
மருத்துவ குணங்கள்.................... 7

passion fruit nutrition facts....................8

இயற்கை
*புரட்சிக்கவி (கவிதை)*.................... 10

கவிதைகள்.................... 12

இனவுணர்வு (சிறுகதை)
*இருங்கோவேள்*.................... 13

எளிய இயற்கை வைத்தியம்....................16

ஏமாத்தி வெளயாடுராய்ங்கடோய்!(சிறுகதை)
*வேலன் மகன்*.................... 19

தமிழில் பேசுவது கேவலமா?
*இயக்குநர் விக்ரமன் கேள்வி*.................... 21

பத்திரிகையாளர்கள் ஏமாற்றப்பட்டார்களா?
*இமயவரம்பன்*....................23


சோத்துக்குச் செத்தவன் (சிறுகதை)
*இருங்கோவேள்*.................... 25

முல்லை நீதான் (கவிதை)
*பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி*.................... 26

உண்மையைத் தேடி (5)
*இராஜாசிங்*.................... 28

மக்களாட்சியின் மகத்துவம்
*வேர்மகள்*.................... 32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.





# இட்டார் பெரியோர்

ஒரு தலைவர் சிறை சென்றாலோ அல்லது இறந்து விட்டாலோ பாதிக்கப்படுவது அவர்களது குடும்பத்தினரை விட பொதுமக்கள்தான். வேலை செய்ய விடாமல் தடுப்பதே குற்றம் என்ற நிலையில், வேலை செய்து சம்பதித்த பொருளா தாரத்தை அரசியல் என்ற பெயரால் அழிப்பது என்பது மிகப்பெரிய குற்றம். அரசின் பொதுச் சொத்துகளை அழிப்பது என்பது பொதுமக்களின் பொருளாதாரத்தை அழிப்பதாகவே ஆகும். இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்கும்போது அதற்குக் காரணமானவர்களிடம் அழிக்கப்பட்ட சொத்துகளின் மதிப்பை அவர்களிடமிருந்தோ அல்லது அவர்கள் சார்ந்த கட்சிகளிட மிருந்தோ, அல்லது அவர்களை ஏவியவர்களிடமிருந்தோ பெற வேண்டும்.

சில சமூக விரோதிகள், இம்மாதிரியான சூழல்களில் எரிகிற வீட்டில் பிடுங்குவது இலாபம் என்ற கேடுகெட்ட எண்ணத்தில் பொருட்களை களவாடிச் செல்கின்றனர்.

இம்மாதிரியான நிகழ்வுகளில் தனது கட்சி மேலிடம் தான் செய்யும் அடாவடித்தனங்களையும், பிற கட்சிக்ககாரர்களை அடிப்பபதையும், அவர்களது சொத்துகளைச் சேதப்படுத்தவ தையும் பார்க்க வேண்டும். அதைப் பார்த்துப் பாராட்டி, அவர்களுக்கு பதவிகளும் பொறுப்புகளும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இப்படிப்பட்ட செயல் களில் ஈடுபடுகிறார்கள். ஒரு நல்ல அரசியல் கட்சித்தலைவராக இருந்தால், அது தவறு என்று சுட்டிக் காட்ட வேண்டும். அவர்களைக் கண்டிக்க வேண்டும். ஆனால் இப்போது உள்ள தலைவர்களோ பாராட்டுப் பத்திரம் வாசித்து அவர்களுக்கு பதவியையும் பொறுப்பையும் தந்துவிடுகின்றனர். இச் செயல்களை அந்தக் கட்சிதான் செய்கிறது, இந்தக் கட்சிதான் செய்கிறது என்று அல்ல. எல்லா அரசியல் கட்சிகளுமே இப்படித்தான் நடந்து கொள்கின்றன.

பொதுச்சொத்துகளையும் தனியார் சொத்துகளையும் அழிப்பவர்களுக்கும், பொதுமக்களுக்கு ஊறு விளை விப்பவர்களுக்கும் எந்தக் கட்சி தண்டனை தருகிறதோ அந்தக் கட்சிதான் பொதுமக்களுக்கான கட்சியாக இருக்கும். அப்போதுதான் பொதுமக்கள் எந்த அச்சமுமின்றி வாழ முடியும். அந்த வாழ்வைத்தான் ஒவ்வொரு சாதாரண மனிதனும் விரும்புவான்.

அவர்கள் எவ்வளவோ சொத்துச் சேர்த்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது இது என்ன பெரிய சொத்தா என்று சில அதிமுகவினர் பேசுகிறார்கள். உண்மைதான். இதில் சிறிய குற்றம் பெரிய குற்றம் என்பதல்ல. திமுக வினர் குற்றம் செய்திருந்தால் அதை நீதி மன்றத்திற்கு எடுத்துச் சென்று அவர்கள் முறைகேடாக சேர்த்த சொத்தை பறிமுதல் செய்ய வேண்டும் என்ற கருத்திற்கு யாரும் எதிர்க்கருத்துக் கூற மாட்டார்கள். மக்கள் கொடுத்த அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி சொத்துச் சேர்ப்பர் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் சேர்த்த சொத்துகள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதுதான் அறமாக இருக்க முடியும்.

கட்சிக்காரர்கள், தாங்கள் தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்யும்போது தங்களிடம் எவ்வளவு சொத்து இருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறார்கள். அது போல அவர்கள் பதவிக்காலம் முடியும்போது தங்களது சொத்துக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டும். பதவியில் இருந்த அந்த நாட்களில் அவர்களது ஊதியம், மற்ற நியாயமான இலாப, வரவு இனங்கள் தவிர, கூடுதலாக பணமோ சொத்துகளோ இருந்தால், அச்சொத்துக்களைப் பறிமுதல் செய்து, அவர்களைத் தண்டனைக்குள்ளாக்க வேண்டும். கணக்கு காட்டாதவர்கள் அதற்குப் பின் வரும் அரசு பயன்களைப் பெற தகுதி இல்லாதவர் என்ற நிலை இருக்க வேண்டும். ஒரு முறை அமைச்சராக இருந்தவர் மறுமுறை அமைச்சராவதற்கு தகுதியற்றவராகக் கருதப்பட வேண்டும். இரண்டு முறை சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் அதற்கு மேல் தேர்தலில் நிற்க தகுதியற்றவர் களாகக் கருதப்பட வேண்டும். மக்களாட்சி நடக்கின்ற நாடு. எல்லோரும் தங்களது திறமையை, அறிவை நாட்டின் வளர்ச்சிக்குத் தர வேண்டும் என்று எண்ணுகிறார்கள். அந்த எண்ணத்தை ஈடேற விடாமல் ஒருசிலரே வாழ்நாள் முழுதும் ஆட்சியில் இருப்பது சரியானதல்ல.

மக்களாட்சி என்பது குடிமக்கள் எல்லோரையும் சமமாக மதிப்பதுதான். ஒரு சிலரை இறைவனுக்கு இணையாகச் சொல்லி வணங்குவது அல்ல. நாட்டில் வாழும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் மேம்பட்டவர்களோ கீழானவர்களோ அல்ல. எல்லோருக்கும் பொதுவாக இயற்றப்பட்டு கடை பிடிக்கப்பட்டுவரும் சட்ட திட்டங்களுக்கு மனிதர்கள் எவ்வாறு மதிப்பளித்து நடக்கிறார்களோ அதை வைத்துதான் உயர்ந் தவர், தாழ்ந்தவர், நல்லவர், கெட்டவர் என்று தீர்ப்பிட முடியும். சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு, பிறருக்கு துன்பம் தராது ஒரு மனிதன் வாழ்வான் என்று சொன்னால் அந்த மனிதனே உயர்ந்தவன். அவனே, தனது உழைப்பின் பயனை, பிறருக்குத் தருவானானால் அவன் மகாப்பெரியவன். இட்டார் பெரியோர்.

◆





# சமூக ஆர்வலர் - ஏழைகளின் மருத்துவர் கின்னஸ் புகழ் ச. பாஸ்கரன்

மருத்தவர் ச. பாஸ்கரன் தூத்துக்குடி – நெல்லை நெடுஞ் சாலையில் அமைந்துள்ள புதுக்கோட்டையில் ந. சண்முக சுந்தரம் – ஞானம்மாள் தம்பதியரின் இளைய மகனாகப் பிறந்தார். பள்ளிப் பருவத்திலேயே கவிஞர், பேச்சாளர், எழுத்தாளர் என, பல முகங்களைப் பெற்றவர். தமிழின் பால் சிறுவயதில் இருந்தே ஈர்ப்புக் கொண்டவர். 'கண்ணன்' இதழ் நடத்திய, அகில இந்திய ரீதியிலான சிறுகதைப் போட்டியில் இவரது 'அந்த வார்த்தைகள்' எனும் சிறுகதை, முதல் பரிசைத் தட்டிச் சென்றபோது, இவர் ஏழாவது படிக்கும் சுட்டிப்பையன்.

படித்திட்ட காலங்களில் மாவட்டம் – மாநிலம் போற்றிட இவர் செய்திட்ட அரங்கேற்றங்கள் இவர் படித்த கல்வியகங் கள் எய்திட்ட புகழேற்றங்கள்.

படித்திட்ட காலங்களில் மாவட்ட – மாநில அளவில் கவியரங்கங்கள் – கருத்தரங்கங்களில் பங்கேற்று, தலைமை யேற்று பாராட்டும் பரிசும் பெற்றிட்ட பாவலர். மேடைப்பேச்சுக ளிலும் சோடைபோகாத நாவலர்.

தமிழைத் தனிப்பாடமாக எடுத்துப் படிக்காவிட்டாலும் தளை முதலான பா இலக்கணங்களை தலை பாடமாக உரைப்பவர். மரபு மாறாத மணிக்கவிதைகள் படைப்பவர்.

வானொலி இளைய பாரத நிகழ்ச்சிகளில் இவரது கவிதைத் தொகுப்புகள் வளைய வருவது வாடிக்கை.

புதுமுக வகுப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்திலேயே முதலாவதாகத் தேறி லயோலா கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர். சென்னை மருத்துவக் கல்லூரியில் சிறப்புத் தகுதி மாணவர் உதவித் தொகை பெற்று மருத்துவம் பயின்று மிகஉயர் மதிப்பெண்களுடன் சிறப்புறத் தேறினார். பின்னர் எலும்பு முறிவு நிபுணர் படிப்பும் அங்கேயே முடித்தார். அமெரிக்கா, பிரான்ஸ், கனடா நாடுகளின் பல்கலைக்கழகங் களின் எலும்பு முறிவு மருத்துவத்தில் ஃபெலோசிப் பெற்றார். பட்டங்களும் பெற்றார்.

மருத்துவ உலகில், நோய் பற்றியும், நோய் பற்றிடின் போக்கிடும் முறை பற்றியும், பாமரரும் புரிந்து கொள்ளும் இனிய எளிய தமிழில் பாமரர்கள் படிக்கின்ற நாளிதழ்களில் நோய் வாரியாக ஆய்ந்தறிந்து தொடர்ந்து எழுதுகின்ற முதல் மருத்துவர் என்ற முழுப்பெருமையும் இவர்க்கு உண்டு. தொலைக் காட்சி, வானொலி யில் தொடர்ந்து இவர் மருத்துவத் தைப் பற்றியும் பேசி வருகிறார்.

9-2-83 அன்று தமிழக நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர். நாவலர் நெடுஞ்செழியன் அவர் கள் மருத்துவர் பாஸ்கரன் எழுதிய பாஸ்கரன் கவிதைகள் என்ற கவி தைப் புத்தகத்தை வெளியிட் டுப் பாராட்டினார் என்பது குறிப்பிடத் தக் கதாகும்.

சென்னைத் துறைமுகத்தில் பணியாற்றி பின்னர், விருப்ப ஒய்வு பெற்று, தன் சொந்த வீட்டிலேயே (எம்.எம்.டி.ஏ. காலனி, சென்னை.) மருத்துவ ஆலோசனை வழங்கி வருகிறார். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப்.எஸ்., சுங்கத்துறை உயரதிகாரிகளில் மிகப் பெரும்பான்மையினரின் குடும்ப மருத்துவராகத் திகழ்கிறார் மருத்துவர். ச. பாஸ்கரன் அவர்கள்.

பெரிய மருத்தவமனை கட்டிப் பெரும் பணங்குவிக்கும் வாய்ப்பும் வசதியும் இருந்தும், இவரது துணைவியாரும் மருத்துவராக இருந்தும், மக்கள் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபத்திக் கொண்டமையைப் பாராட்டியும், மருத்துவத்தை வணிகமாக்காமல், தேவையற்ற சோதனை கள், மருந்துகளைத் தவிர்த்து வரும் இவரது மகத்துவத்தைக் கண்டறிந்து, தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து கௌர வித்தது. உயர்ந்த மனிதர் அப்துல் கலாமும் அப்போதைய தமிழக சுகாதாரத்துறை அமைச்சரும் அந்த விருதை மருத்து வர் பாஸ்கரனுக்கு வழங்கினர்.

தனது செல்வாக்கு அனைத்தையும் ஏழை எளியவர் நலனுக்காகப் பயன்படுத்தி வரும் இந்த சமூக ஆர்வலரின் மாதிரி மருந்துகள் அனைத்தும் ஏழை எளியவர்களின் இல்லங்களுக்கே சென்று சேர்வது மட்டுமல்ல, இவரது மருத்துவ நண்பர்களுக்கும் அந்த ஆர்வத்தை ஏற்படுத்தி வருபவர். இவரது சமூகச் சேவையை உலகறியச் செய்ய விரும்பிய பன்னாட்டு நிறுவனமொன்று இவரது பெயரையும் சேர்த்து ஏற்படுத்திய ஒரு அறக்கட்டளையின் சேவை உலகளாவிய புகழ்பெற்றுள்ளது. அதனால் இவரது பெயரும் கின்னஸ் ரிக்கார்டில் இடம் பெற்றுள்ளது என்று அண்மையில் அறிவித்து சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளமை இவரது புகழுக்கு மணி மகுடம்.

——— பேராசிரியர் அப்பாத்துரை



# தவம்

மலரின் தவம் கதிருக்காக
மண்ணின் தவம் மழைக்காக
கரையின் தவம் அலைக்காக
புல்லின் தவம் பனிக்காக
விடியலின் தவம் வெளிச்சத்துக்காக
இரவின் தவம் நிலவுக்காக
வண்டின் தவம் தேனுக்காக
மாலையின் தவம் தென்றலுக்காக
சிப்பியின் தவம் முத்துக்காக
தாயின் தவம் மழலைக்காக
மழலையின் தவம் அரவணைப்புக்காக
ஆண், பெண் தவம் ஆதரவுக்காக
ஆமாம், பூவே உன் ஒற்றைக்கால் தவம்
எந்தக் கூந்தலுக்காக?

பாக்யலட்சுமி அருணாச்சலம்

# செய்து பாருங்கள்!



1. சமையலறையில் பயன்படுத்தும் பிடிதுணிகளை ஷாம்பு கொண்டு துவைத்தால் பிசுக்கு வாடை இல்லாமல் மணமாகவும், சுத்தமாகவும் இருக்கும்.

2. உடல் வெப்பம் குறைய வெறும் வயிற்றில் ஒரு தேக்கரண்டி வெந்தயம் சாப்பிட்டு ஒரு தம்ளர் குளிர்ந்த தண்ணீர் குடிக்கவும்.

3. வீடு துடைக்கும் தண்ணீரில் கால் தம்ளர் பன்னீர் கலந்து துடைத்தால் வீடு வாசமுடன் இருக்கும்.

பாக்யலட்சுமி அருணாச்சலம்



# சீத்தாப்பழத்தின் சில மருத்துவ குணங்கள்

சீத்தாப்பழம் தனிப்பட்ட மணமும் சுவையும் கொண்டது. சீத்தாப்பழத்தின் தோல், விதை இலை, மரப்பட்டை அனைத்துமே அரிய மருத்துவ பண்புகளைக் கொண்டவைகளாகும். ஆங்கிலத்தில் சீத்தாப்பழத்திற்கு கஸ்டட் ஆப்பிள் என்றும் இந்தியில் சர்பா என்றும் பெயர்.

சீத்தாப்பழத்தில் நீர்ச்சத்து அதிகமாக உள்ளது. மேலும் மாவுச்சத்து, புரதம், கொழுப்பு, தாது உப்புக்கள், நார்ச்சத்து சுண்ணாம்புச் சத்து. பாஸ் பரஸ், இரும்புசத்து போன்றவை அடங்கியுள்ளன. இத்தகைய சத்துக்கள் சீத்தாப்பழத்தில் அடங்கியிருப்பதனால் தான் இப்பழம் மிகுந்த மருத்துவ பயன்களை அடக்கியுள்ளது.

**மருத்துவப் பயன்கள்:**

1. சீத்தாப்பழத்தை உண்ண செரிமானம் ஏற்படும், மலச்சிக்கல் நீங்கும்.

2. சீத்தாப்பழச்சதையோடு உப்பைக் கலந்து, உடையாத பிளவை பருக்கள் மேல் பூசிவர, பழுத்து உடையும்.

3. இலைகளை அரைத்து புண்கள்மேல் போட்டுவந்தால் புண்கள் ஆறும்.

4. விதைகளை பொடியாக்கி சம அளவு பொடியுடன் சிறுபயறு மாவு கலந்து தலையில் தேய்த்து குளித்து வர முடி மிருதுவாகும், பேன்கள் ஒழிந்து விடும்.

5. சீத்தாப்பழம் காய்ச்சலைக் குணப்படுத்தும்

6. சீத்தாப் பழ விதைப்பொடியோடு கடலைமாவு கலந்து எலுமிச்சை சாறில் குழைத்து தலையில் தேய்த்து, ஊறிய பின்னர் குளித்து வர முடி உதிராது.

7. சீத்தாப்பழ விதைப்பொடியை மட்டும் தலையில் தேய்த்து குளித்து வந்தால் முடி உதிராது.

8. சிறுவர்களுக்கு சீத்தாப்பழம் கொடுத்துவர எலும்பு உறுதியாகும். பல்லும் உறுதியாகும்.

9. சிறிதளவு வெந்தயம், சிறுபயறு, இரண்டையும் இரவு ஊறவைத்து பின்னர் காலையில் அரைத்து, அதோடு சீத்தாப்பழ விதைப்பொடியைக் கலந்து, தலையில் தேய்த்து, ஊறிய பின்னர் குளித்துவர தலை குளிர்ச்சிபெறும். முடியும் உதிராது. பொடுகு காணாமல் போகும்.

10. சீத்தாப்பழத்தை தொடர்ந்து உண்டு வந்தால் இதயம் பலப்படும் காசநோய் இருந்தாலும் மட்டுப்படும்.


**பாக்யலட்சுமி அருணாச்சலம்**



# Passion fruit nutrition facts



David



Pleasantly sweet and tart, passion fruit, or **granadilla**, is brimming with numerous plant derived health benefiting nourishment essentials for the optimum growth. Passions are native to subtropical wild regions of South America, probably originated in Paraguay. The plant is an avid climber (vine) which grows on anything that it can grab through its tendrils.

Botanically, this exotic fruit belongs to the family of *Passifloraceae,* in the genus; *Passiflora*. Scientific name: **Passiflora edulis**.

The passiflora plant requires well-drained fertile soil, and good moisture to flourish. It grows quickly and reaches about 15-20 feet per annum once established. Its average life span is about 5-7 years.

Over five hundred cultivate types of passions exist; however, only two main types, purple and yellow cultivars, are widely cultivated. During each season, the vine bears greenish-white fragrant flowers which subsequently develop into fruits.

The passion fruit features round to oval shape, 4 to 8 centimeters in diameter, have a tough outer shell (rind) as that in mangosteen. Average weight is about 35-50 g.

Inside, the fruit consists of membranous sacs containing light orange-color, pulpy juice with numerous small, hard, dark-brown or black, pitted seeds. Yellow passions are generally larger than the purple varieties, but the pulp of the purple fruit is less acid, richer in aroma and flavor, and has a higher proportion of juicy pulp.

### Health benefits of passion fruit

- Delicious, passion fruit is rich source of antioxidants, minerals, vitamins and fiber. 100 g fruit contains about 97 calories.

- The fruit is a very good source of dietary fiber. 100 g fruit pulp contains 10.4 g or 27% of fiber. Good fiber in the diet helps remove cholesterol from the body. In addition dietary insoluble fiber by acting as a bulk laxative helps protect the colon mucous membrane by decreasing exposure time to toxic substances in the colon as well as binding to cancer-causing chemicals in the colon.

- Passion fruit is good in **vitamin C**, providing about 30 mg per 100 g. Vitamin-C (ascorbic acid) is a powerful water soluble anti-oxidant. Consumption of fruits rich in vitamin C helps the body develop resistance against flu-like infectious agents and scavenge harmful, pro-inflammatory free radicals.

- The fruit contains very good levels of **vitamin-A** (provides about 1274 IU per 100 g), and flavonoid antioxidants such as â-carotene and cryptoxanthin-â. Current research studies suggest that these compounds have antioxidant properties, and along with vitamin A are essential for good eye-sight.


- Vitamin A is also required for maintaining healthy mucus membranes and skin. Consumption of natural fruits rich in vitamin-A,

and flavonoids may helps to protect from lung and oral cavity cancers.

- Fresh granadilla is very rich in potassium. 100 g fruit pulp has about 348 mg of potassium. Potassium is an important component of cells and body fluids, and helps regulate heart rate and blood pressure.

- Furthermore, granadilla is a very good source of minerals. Iron, copper, magnesium and phosphorus are present in adequate amounts in the fruit. ◆

# ஏமாற்றும் திரைப்பட ஒளிப்பதிவாளர்?


221/CSR/R8x/2014
19.30 மணிக்கு
புகார் மனு ஏற்புச் சான்றிதழ்
தேதி: 16.06.2014
மனுதாரரின் பெயர்: திரு/திருமதி/செல்வி T. ராஜாராம்
த/பெ, தங்கராஜன்
வயது: 35
விலாசம்: No:67 அழகிரி நகர் 4-வது தெரு வடபழனி, சென்னை-26
மனுவின் சாராம்சம்:
மனுவின் தேதி:
மேலே குறிப்பிட்டவர் கொடுத்த விண்ணப்பத்தின் மீது
(1) முதல் தகவல் அறிக்கை (FIR)எண் ....................ல் ....................பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது(FIR) நகல் வழங்கப்பட்டுள்ளது.
எதிர் மனுதாரர் - ராஜேந்திரன்
(2) சமுதாயப் பணிப் பதிவேட்டில் வரிசை எண் ....................ல் .................... மாத காலத்திற்குள் பதிவு செய்யப்பட்டுள்ளது .................... நடவடிக்கை எடுக்கப்படும்.
(அல்லது)
(3) புகார் மனுவின் பேரில் முதல் தகவல் அறிக்கை எண் ....................ல் 221/CSR/2014 பிரிவுகளின் கீழ் வழக்காக (அல்லது) சமுதாயப் பணிப் பதிவேடு வரிசை எண் ....................ல் மனுவாகப் பதிவு செய்யப்பட்டு ....................
அதிகாரவரம்பு (jurisdiction) உள்ள .................... காவல் நிலையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.
T. ராஜாராம்
9943857469
P. Nali
(ஒம்) WPC 31962
காவல் நிலையத்தின் முத்திரை

**தி**ண்டுக்கல் மாவட்டம் பழனியைச் சேர்ந்த த. ராஜாராம் என்பவர், அவரது நண்பர் திரு யுவராஜ் என்பவரது வீட்டில் தங்கி சினிமாவில் இயக்குனராக பணி யாற்றி வருகிறார். கடந்த 16/5/2013 ஆம் தேதி 'கடுக்கன்' என்ற பெயரில் திரைப்படம் ஒன்றை இயக்க ஆரம்பித்திருக் கிறார் 17 நாட்கள் படப்பிடிப்பு நடந்திருக் கிறது.

இப்படத்திற்கு ஒளிப்பதிவாளராக விருகம் பாக்கத்தில் உள்ள திரு. ராஜேந்திரன் என்பவரை நியமித்து படப் பிடிப்பு நடந்துள்ளது. அவருக்கு ரூபாய் 60000 பணம் கொடுத்ததாகவும் படப் பிடிப்பு சில காரணங்களால் தொடர்ந்து நடத்த இயலாது போனபோது ஒளிப்பதிவாளரிடம் இது வரை எடுத்தவகை ளைக் கேட்டதாகவும் அதை அவர் தராமல் ஏமாற்றி வருவதாகவும் கூறி னார். இது பற்றி வடபழனி ஆர்-8 காவல் நிலை யத்தில் புகார் செய்திருப்பதாகவும் கூறினார்.


காவல் நிலையம் செல்வதற்கு முன்பதாக திரைப்படம் தொலைக்காட்சி தயாரிப்பாளர் கள் சங்கத்தில் புகார் செய்ததாகவும் கூறி னார். இவர்களுக்குள் என்ன ஒப்பந்தம்? ஏன் இந்த புகார்கள்? சங்கம் தலையிட்டு இவர்க ளுக்குள் சமரசம் செய்து ராஜாராமின் வாழ்க் கைக்கு வழிகாட்டுமா? அல்லது காவல் துறை இது சம்பந்தமாக சரியான நட வடிக்கை எடுக்குமா? எதுவாக இருந்தாலும் விரைவில் விடை கிடைத்தால் இரு தரப் பாருக்கும் நல்லது தானே.

**உமா மகேஸ்வரி**

10

புரட்சிக்கவி

பாரதிதாசனார்



புரட்சிக்கவிஞர்

# இயற்கை

### 5. சிரித்த முல்லை

**அகவல்**

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன், குளிர்ந்த தென்றல் வந்தது.
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது.
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்.
சோலை நடுவில சொக்குப் பச்சைப்
பட்டுடை பூண்டு படர்ந்து கிடந்து
குலுக்கென்று சிரித்த முல்லை
மலர்க்கொடி கண்டேன் மகிழ்ச்சிகொண் டேனே!

### 6. உதய சூரியன்

*எண்சீர் விருத்தம்*

உலகமிசை உணர்வெழுப்பிக் கீழ்த்திசையின் மீதில்
உதித்துவிட்டான் செங்கதிரோன்: தகத்தகா யம்பார்!
விலகிற்றுக் காரிருள்தான்: பறந்ததுபார் அயர்வு:
விண்ணிலெலாம் பொன்னொளியை ஏற்றுகின்றான்
அடடா!


மிலையும்எழிற் பெருங்கடலின் அமுதப்ர வாகம்!
மேலெல்லாம் விழிஅள்ளும் ஒளியின்ப்ர வாகம்!
நலம்செய்தான்: ஒளிமுகத்தைக் காட்டிவிட்டான், காட்டி
நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை!

ஒளிசெய்தான் கதிர்க்கோமான் வானகத்தில்
மண்ணில்!
உயர்மலைகள், சோலை, நதி இயற்கை எழில்
கள்பார்!
களிசெய்தான் பெருமக்கள் உள்ளத்தில்! அதனால்
கவிதைகள், கைத்தொழில்கள் என்னென்ன ஆக்கம்!

தெளிவளிக்க இருட்கதவை உடைத்தெறிந்தான் பரிதி!
திசை மகளை அறிவுலகில் தழுவுகின்றார் மக்கள்:
ஒளியுலகின் ஆதிக்கம் காட்டுகின்றான்: வானில்
உயர்கின்றான்: உயதசூரி யன்வாழ்க நன்றே!

## 7. காடு

**(காவடிச் சிந்து மெட்டு)**



முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும்! – எதிர்
முட்டுகருங் கற்களும்நெ ருங்கும் – மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து வைக்கையிலே
கால்களில்த டுங்கும் – உள்
நடுங்கும்.

கிட்டிமர வேர்கள்பல கூடும் – அதன்
கீழிருந்து பாம்புவிரைந் தோடும் – மர
மட்டையசை வால்புலியின்
குட்டிகள் போய்த் தாய்ப்புலியைத்
தேடும் – பின்
வாடும்.

நீள்கிளைகள் ஆல்விழுதி னோடு – கொடி
வெய்துவைத்த நற்சிலந்திக் கூடு – கூ
வாளெயிற்று வேங்கையெலாம்
வால்கழற்றிப் பாயவருங்
காடு – பள்ளம்!
மேடு!

கேளொடும் கிளம்பிவரும் பன்றி – நிலம்
கீண்டுகிழங் கேஎடுத்த தன்றி – மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி

குன்றில் – புகும்
ஒன்றி.

வானிடை ஓர் வானடர்ந்த வாறு – பெரு
வண்கிளை மரங்கள்என்ன வீறு! – நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும்
ஆறு – இன்பச்
சாறு!

கானிடைப் பெரும்பறவை நோக்கும் – அது
காலிடையே காலிகளைத் தூக்கும் – மற்றும்
ஆனினம் சுமந்தமடி
ஆறெனவே பால்சுரந்து
தீர்க்கும் – அடை
ஆக்கும்.

# அழகு

மருத்துவர் ச. பாஸ்கரன்

ஆரணங்கின் இதழோரம் நடமாடும் ரதமோ?
அழகோடு விளையாடும் நில(வு)ஈயும் இதமோ?
சீரள்ளும் பாவலர்கள் செய்கின்ற கவியோ?
செஞ்சோலை மென்காற்று சேர்க்கின்ற சுவையோ?
பாரதத்தின் தென்மூலை பியில்கின்ற கலையோ?
பாங்கான நல்லருவி தனில்தோன்றும் அலையோ?
யாரிங்கே அழகுக்குப் பொருள்சொல்லு வோர்கள்?
அழகென்றே இதையெல்லாம் எவர்சொல்லு வார்கள்?

தமிழின்றி அழகென்றே எதைநானுஞ் சொல்வேன்?
தமிழன்றிச் சுவையென்றே எதைநானுங் கொள்வேன்
அமிழ்தொத்த சுவையாகும் தமிழென்று கூறும்
அந்நாளின் பேச்செல்லாம் ஓடோட இன்று
தமிழொத்த சுவையாகும் அமுதென்று கூறும்
தரங்காண வேண்டுமடா தமிழ்நாட்டின் புலியே?
இமையென்று தமிழ்காக்க நீயெண்ணி விட்டால்
இடர்பாட்டைப் பொடியாக்க இயலாது போமோ?

காட்டான்



## பொருள் நோக்கா இசை!

இயற்கையின் மாற்றம்
இசையானது
உயிரினங்களின் குரல்
இசையானது
மனிதன் மனதிற்காக
கருவிகள் செய்தான்
இசை கேட்க
இசைக்கொரு
மொழியும் படைத்தான்
இசைக் கலைஞன்
மென்மையானவன் என்ற
பெயரும் பெற்றான்.

இசை தந்து புகழ் சேர்த்தான்
இசை தந்து பொருள் சேர்த்தான்
போதாக்காலம்
பொருளுக்காகவே
இசையானது.

இசையின் உணர்வுகள்
பொருள் தேடல்
என்றானது.
இன்று இசை இருக்கிறதா!
மனிதப் பண்பற்ற
இசைக்கலைஞர்ளின்
கருவி மீட்டலே
கேட்கிறது.
பொருள் பாராது
இசை கூட்டும்
மனித சக்தி எழும்புமா?

சிறுகதை

# இனஉணர்வு

இருங்கோவேள்

பத்து வயதிலேயே தனது அத்தை மகன் இயலரசைப் பார்த்து வெட்கப்பட ஆரம்பித்து விட்டாள் இயலரசி. அவளது அத்தை, தனது திருமணத்திற்கு முன்பே "நீ எனது மகனையோ, மகளையோ உனது மகனுக்கோ மகளுக்கோ திருமணம் செய்து வைக்கச் சம்மதித்தால்தான் நீ ஏற்பாடு செய்யும் எனது திருமணத்திற்கு நான் ஒத்துக் கொள்வேன்" என்று தன் அண்ணனிடம் சம்மதம் வாங்கிக் கொண்டுதான் தனது திருமணத்திற்கு சம்மதம் சொன்னாள் இயலரசியின் அத்தையான வாழ்வரசி.

வாழ்வரசிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு இயலரசன் என்று பெயர் வைத்தார்கள். அதன் பிறகு மூன்றாண்டுகள் கழித்து வாழ்வரசியின் அண்ணனுக்கு பெண்குழந்தை பிறந்தது. பெண் குழந்தை பிறந்த செய்தி கேட்டு முதலில் மகிழ்ந்தவர் வாழ்வரசிதான். உடனே ஓடினாள் மருமகள் பிறந்த இடத்திற்கு. அண்ணனிடமும் அண்ணியிடமும் இவள்தான் என் வீட்டு மருமகள், இயலரசனுக்கு ஏற்ற இயலரசி என்று கொஞ்சினாள்.

தங்கை தன் மகளைக் கொஞ்சியதை நினைவில் கொண்ட வாழ்வரசியின் அண்ணன் தன் மகளுக்கு இயலரசி என்றே பெயர் சூட்டினார். வாழ்வரசிக்கு மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சி. அவள் வேண்டும் என்றே அவ்வாறு கூறவில்லை. அந்த நேரத்தில் அப்படி ஒரு பெயர் அவளது வாயிலிருந்து வந்து விட்டது அவ்வளவுதான். அதைக் கவனித்த அண்ணன் அதையே தன் மகளுக்கு சூட்டியதை நினைத்து, என் அண்ணன் என்மேல் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார் என்பதறிந்து மகிழ்ந்தாள்.

இரு பிள்ளைகளும் வளர்ந்தார்கள். வளருகிற போதே இவள்தான் உனக்கு, இவன்தான் உனக்கு என்று பெரியவர்கள் சொல்லிச் சொல்லி வளர்த்தார்கள். இயலரசி சிறுவயதில் சேர்ந்து விளையாடினாலும் பத்து வயதிற்குப்பின் இயலரசனைப் பார்த்து வெட்கப்பட ஆரம்பித்து விட்டாள். இருவரும் பிற்காலத்தில் கணவன் மனைவியாக ஆகப் போகிறோம் என்ற எண்ணத்திலேயே வளர்ந்தார்கள்.



இயலரசன் பட்டப்படிப்பை முடித்தான். மேலும் ஒரு தொழிற்படிப்பையும் படித்தான். இயலரசி பட்டப்படிப்புடன் படிப்பிற்கு முழுக்குப் போட்டு விட்டு, திருமணம் எப்போது என்ற ஏக்கத்திலேயே வீட்டில் இருந்தாள்.

இயலரசனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைத் தது. குடும்பத்தினர் முதலில் எதிர்த்தாலும் திருமணத்திற்குப்பின் வெளிநாடு செல்லக்கூடாது என்ற உறுதிமொழியை வாங்கிக் கொண்டு அவனை வேலைக்காக வெளிநாடு அனுப்பினர். இயலரசியோ கண்ணீரோடு வழியனுப்பினாள்.

வெளிநாடு சென்ற இளவரசன் சிறப்பாக வேலை செய்தான். ஒருநாள் ஓரிடத்தில் தமிழ்ப்பெண்ணின் கெஞ்சல் குரல் கேட்டு திரும்பிப் பார்த்தான். மிகவும் ஏழ்மைக் கோலத்தில் இருந்த அப்பெண், அந்நாட்டுப் பெண்ணொருத்தியிடம் தமிழ்நாடு செல்வதற்கு உதவிகேட்டு, கெஞ்சிக் கொண்டிருந் தாள். இவனுக்கு அவள் மேல் இரக்கம் பிறந்தது. காரணம், ஒரு தமிழ்ப்பெண் பிறத்தியாரிடம் கெஞ்சலாமா என்ற தன்மான, தன்இன உணர்வு தான். அவள் அருகில் சென்றான். என்னம்மா என்று கேட்டான்? அந்த அமுதமொழியைக் கேட்டுத் திரும்பியவள், வியப்பு, மகிழ்ச்சி என்ற உணர்வுகளை வெளிப்படுத்தி மேலும் அழலா னாள். சில வினாடிகளில் அழுகை குறைந்தது. தாம் விடுதலை அடைந்துவிட்டோம் என்று அவள் விழிகள் சொன்னது. அந்தப் பார்வை இயலரச னுக்குப் பிடித்துப்போயிருந்தது.

அவள் சொன்னாள் "நான் இனி யாரிடமும் கெஞ்சமாட்டேன், அதற்கு இனி தேவையில்லை என்பதை உங்களைப் பார்த்ததும் முடிவு செய்து விட்டேன். "நாங்கள் சிங்களப் படைகளால் பாதிக் கப்பட்டோம். எங்கள் வீட்டில் இருந்த ஆண்கள் எல்லோரும் சிங்களர்களால் தந்திரமாகக் கொல்லப்பட்டார்கள். எனது அக்காளும் கொலை செய்யப்பட்டாள். மீதமிருந்த ஒருசிலர் தப்பித்து இருந்த நகைகளையெல்லாம் தோணிக்காரர் ஒருவரிடம் கொடுத்துவிட்டு, தோணியில் ஏறி, கடலில் வந்துகொண்டிருந்தோம். தோணிக்காரர் ஒரு கப்பலில் எங்களை ஒப்படைத்து விட்டுச் சென்றார். கப்பல் இந்த நாட்டை நெருங்குகிற நேரத் தில் எங்களை கப்பல் தலைவர், அங்கு வந்து சேர்ந்த ஒரு தோணிக்காரரிடம் ஒப்படைத்தார். அந்தத் தோணியில் நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கை யில் இந்நாட்டு இராணுவம் வந்தது. தோணிக்காரன் எங்களை அப்படியே விட்டுவிட்டு கடலில் குதித்து நீந்திச் சென்று விட்டான். நீச்சல் தெரிந்த ஒரு சிலர் குதித்து நீந்தினார்கள். நானும் கடலில் குதித்து நீந்தினேன். எப்படியோ கரைக்கு வந்தேன். என்னோடு வந்தவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என்று கூறினாள்.

இயலரசன், அவளை தான் தங்கியிருந்த அறைக்கு அழைத்துச் சென்றான். புதிதாக உடைகள் வாங்கித் தந்து, அந்நாட்டுக் காவல்துறையிடம் நடந்ததைக் கூறி மேலும் இவள் எனது உறவினள் என்றும் கூறினான். அவளது பெயர் இயலரசி, தன்னை விட நான்கு வயது சிறியவள் என்றும் எழுதிக் கொடுத் தான். அவர்கள், அவள் அவனுடன் இருப்பதற்கு தடை ஒன்றும் சொல்லவில்லை. திங்களுக்கு ஒரு முறை இருவரும் வந்து கையெழுத்திட்டுவிட்டு அவளின் இருப்பை உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று கூறி அனுப்பினார்கள்.

வீட்டிற்கு வந்தவன் தனது தந்தையிடம் அலைபேசியில் பேசினான். இவள் கவனித்துக் கொண்டே இருந்தாள். ஆனால் அவன் பேசியது இவளுக்குக் கேட்கவில்லை. ஏதோ ஒரு உணர்வுப் போராட்டத்தோடு பேச்சு போய்க்கொண்டிருந்தது இவளுக்குப் புரிந்தது.

இரண்டு மூன்று நாட்கள் வேலைக்குச் சென்று வந்தான். அடுத்த நாள் ஒரு விடுமுறை தினம். காலை உணவை உண்டு முடித்ததும் அவளிடம் பேச ஆரம்பித்தான். இயல் நான் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும் என்றான். இயலரசன் அவளிடம் இதுவரை அவளது பெயரைக் கேட்கவேயில்லை. ஆனாலும் அவளை இயலரசி என்றே அழைத்தான். அவளும் தனது உண்மையான பெயரைக்கூட கூறவில்லை. மறைக்க வேண்டும் என்பதல்ல, ஆபத்தில் தன்னை காப்பாற்றியவர் சொல்வதே அவளுக்கு முக்கியமாகப்பட்டது. ஈழத்து இயலரசி "சொல்லுங்கள்" என்றாள்.

"நான் உன்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். உனக்குச் சம்மதாமா?"என்று நேருக்கு நேராகக் கேட்டான் இயலரசன். அவள் பதில் கூறவில்லை அவள் கண்கள் குளமாகி கண்ணீர் வழிந்தோடியது. அவனது மார்பில் கண்களைப் புதைத்தாள். அவன் புரிந்து கொண்டான். "சரி புறப்படு" என்றான். கண்ணீர் காணாமல் போய்விட்டது, விரைந்து தயாரானாள். தான் முன்னரே ஏற்பாடு செய்திருந்தபடி அவனது தொழிலக நண்பர்கள் தயாராக இருந்தனர். அந்த அரசின் சட்டப்படி அந்நாட்டில் அவளைத்

திருமணம் செய்து கொண்டான். நண்பர்களுக்கும் உடன் வேலை செய்பவர்களுக்கும் விருந்து கொடுத்தான்.

திருமண நிகழ்வு நடக்கும்போதே, அவனது தந்தைக்கு இணைய இணைப்பு அலைபேசிமூலம் திருமணத்தை ஒலிபரப்பினான் இயலரசனின் நண்பன். இயலரசனின் தந்தையார் தனது மனைவியை அருகில் வைத்துக் கொண்டு பார்த்தார். இயலரசனின் அம்மா வாழ்வரசி அழுதுகொண்டே பார்த்தார் என்றாலும் மகன் நன்றாக வாழ வேண்டும் என்று அவர் மனம் சொல்லிக் கொண்டே இருந்தது. இந்த விசயத்தை வாழ்வரசியின் அண்ணனுக்கும் இயலரசிக்கும் இயலசரனின் தந்தை கூறிவிட்டார். அவர்கள் மிகுந்த துன்பத்திற்கு ஆளானார்கள்.

தனது அன்பிற்குரிய அத்தான், தனது கணவன் இயலசரன்தான் என்று இதுவரை நம்பிவந்த இயலரசி படிப்படியாகத் தன்னைத் தேற்றிக் கொண்டாள். அவளிடம் இயலரசன் திருமணத்திற்கு முன்பே பேசியிருந்தான். அவன், அவனது மனைவிக்கு இயலரசி என்ற பெயர் வைத்திருப்பதாகச் சொன்னதும் அவளால் அவளது கண்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. காட்டாற்று வெள்ளம் போல் கரைபுரண்டு அலை பேசி அழைப்பைக் கூட துண்டித்துப் போட்டது கண்ணீர். என்றாலும் நிலையை உணர்ந்து கொண்டாள். தனது பெற்றோரிடம் தான் மேலும் படிக்கப் போவதாகக் கூறினாள். அவளது விருப்பத்திற்கு யாரும் தடைபோடவில்லை. அவளை மேற்படிப்பு படிக்க வைத்தார்கள்.

காலம் கடந்தது. இயலரசனின் பெற்றோர் அவனை ஊர் வருமாறு அழைத்தனர். அவன் வருகிறேன் என்று சொன்னானே தவிர வரவில்லை. பெற்றோரிடம் பேசும்போதெல்லாம் இயலுக்கு எப்போது திருமணம் என்ற கேள்வியை கேட்காமல் இருந்ததே இல்லை. பெற்றோருக்குப் புரிந்தது. இயலுக்குத் திருமணம் ஆகாமல் இவன் இங்கே வரமாட்டான் என்று. வாழ்வரசியின் அண்ணனிடமும் அவரது மனைவியிடமும் இயலரசி திருமணம் பற்றி இயலரசனின் தந்தை பேசினார். அவர்கள் உங்கள் மருமகளிடம் நீங்களே பேசிக் கொள்ளுங்கள் என்று கூறிவிட்டனர். இயலரசியிடம் பேசிய போது "என்னை மறந்தவருக்கு என்மேல் என்ன அக்கறை" என்று கூறிவிட்டுச் சென்று விட்டாள்.

இயலரசனின் பெற்றோர் தங்களுக்கு பேரனோ பேத்தியோ பிறந்த செய்தி வரும் என்று மூன்றாண்டுகள் காத்திருந்தனர். வரவில்லை. இதுபற்றி இயலரசனிடம் அம்மா வாழ்வரசி கேட்டார். அதற்கு அவன் சொன்ன பதில் "மாமா மகள் இயலரசிக்கு திருமணம் நடக்கட்டும் அதற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றான். மாமா மகளை ஏமாற்றி விட்டோமோ என்ற உணர்வு அவனுக்குள் இருப்பதை தாய் புரிந்து கொண்டார். அவனுடைய இந்தப் பதிலை இயலரசியிடம் கூறினார்கள். அதற்குப் பிறகுதான் இயலரசி தன் அத்தையிடம் முகம் கொடுத்து பேச ஆரம்பித்தாள். அவளாகவே தனது அப்பாவிடம் "எனக்கு மாப்பிள்ளை பாருங்கள்" என்றாள். அம்மாவுக்கு வயிற்றில் பால் வார்த்தது போல் இருந்தது.

இருவீட்டாரும் சேர்ந்து இயலரசிக்கு மாப்பிள்ளை தேடினார்கள். நல்ல குணமான பையனைத் தேர்ந்தெடுத்து திருமண ஏற்பாடுகள் நடந்தன. இயலரசனுக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. திருமணத்திற்கு முந்திய நாள் இயலரசன் தன் மனைவியோடு தாய்நாடு திரும்பினான். இனி நான் வெளிநாடு செல்ல மாட்டேன் என்று தன் பெற்றோரிடம் கூறினான் இயலரசன். பெற்றோர் மகிழ்ந்தனர். தனது மாமா மகள் சிறுபிள்ளையாய் இருக்கும்போது, தனக்குப் பிடிக்கும் என்று சொன்ன ஆபரணங்களை எல்லாம் வாங்கி வந்திருந்தான். அவைகளை அவனும் அவனது மனைவியும், இயலரசி வீட்டுக்குச் சென்று அவளிடம் கொடுத்தனர். கண்ணில் நீர் வழிந்தோட வாங்கிக் கொண்டாள். தனது அத்தை மகன் கட்டி வந்த அந்தப் பெண் தன்னை விட அழகு இல்லை என்பதைப் புரிந்து கொண்டாள் இயலரசி.

இவர் அழகுக்காக அவளைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவருடைய மனிதாபிமானமும் தமிழினப் பற்றும் தான் அவரை திருமணம் செய்து கொள்ள தூண்டியிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டாள். திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

இரண்டு இயலரசிகளும் பத்தாவது மாதத்தில் குழந்தை பிறப்பிற்காக ஒரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த இரு குடும்பப் பெரியவர்களும், தங்களுக்கு குழந்தைகள் பிறந்த போது எப்படி மகிழ்ந்திருந்தார்களோ அதை விட அதிகமான மகிழ்ச்சியில் தங்களது பேரப் பிள்ளைகளின் பிறப்பை எதிர்நோக்கியிருந்தனர்.

◆

# எளிய இயற்கை வைத்தியம்

1. வெந்தயத்தை மட்டும் ஊற வைத்து நன்கு அரைத்து கலையின் முடி வேர்க் கால்களில் தடவி வைத்து நன்கு ஊறியபின் தலைமுடியை அலசினால் முடி நன்கு வளருவதுடன் கண் எரிச்சல் உடல் சூடு தணியும்.

2. வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும் வெண்ணெயையும் கலந்து குடித்துவிடுங்கள் சிறிது நேரத்திலேயே குணம் தெரியும்.

3. புதினா விதையை வாயில் போட்டு மென்றுக்கொண்டிருந்தால் பல்லில் ஏற்படும் கூச்சம் மறையும்.

4. குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிய நாளில் மட்டும் கீரை சாப்பாட்டுக்கு கொடுக்கக் கூடாது.

5. சீதபேதி கடுமையாக உள்ளதா? ஊறவைத்த வெந்தயத்தை அரைத்து தயிரில் கலந்து 3 வேளை கொடுக்க குணமாகும்.

6. அடிக்கடி ஏப்பம் வருகிறதா? வேப்பம்பூவை தூள் செய்து 4 சிட்டிகை எடுத்து இஞ்சி சாறுடன் கலந்து உட்கொண்டால் குணமாகும்.

7. உலர் திராட்சைப் பழத்தை வெது வெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதய நோய் தீரும்.

8. வல்லாரைக் கீரையை நிழலில் காயவைத்து பொடித்து தினமும் ஒரு தேக்கரண்டி உண்டு வந்தால் நினைவாற்றல் பெருகும்.

9. கேரட் சாறும் சிறிது தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும்.

10. எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும்

நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சி சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.



11. எறும்புகள் போன்ற பல்வேறு பூச்சிகள் கடித்து வலி, வீக்கம் போன்றவை ஏற்பட்டால் வெங்காயத்தை நறுக்கி அந்த இடத்தில் தேய்க்கவும்.

12. கொழு கொழுவென குண்டாக இருப்பவனுக்கு உடல் இறுகி மெலிய கொள்ளுப்பயறு கொடுக்க வேண்டும்.

13. எள், எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைந்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.

14. கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.

15. தினமும் குடிநீரைக் காய்ச்சும் போது ஒரு கைப்பிடி சுக்கைத் தட்டிப் போடலாம். தேவைப் பட்டால் குடிநீரை வடிகட்டிக் கொள்ளலாம். மருத்துவ குணங்களைக் கொண்ட இப்பொருள், ஜீரணத்துக்கு உதவும் வாயுவை அகற்றும் மலச்சிக்கல் இருக்காது தண்ணீரும் குடிக்கச் சுவையாக இருக்கும்.

16. வாய்ப் புண்ணுக்கு கொப்பரைத் தேங்காயை கனகசாவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் குணமாகும்.

17. பச்சை கொத்துமல்லித் தழைகளை மிக்ஸில் அரைத்து தினமும் காலையில் எழுந்தவுடன் குடித்துவர தலைவலி நிங்கும்.

18. வசம்பை எடுத்துச் சுட்டுக் கரியாக்கி அதனுடன் நல்லெண்ணெய் தேங்காய் எண்ணெய் விளக்கெண்ணெய் ஆகிய மூன்றையும் கலந்து அடிவயிற்றில் பூசினால் வயிற்றுப் பொருமல் நீங்கும்.

19. தயிரை உடம்பில் தேய்த்துக் குளித்தால் வேர்குருவை விரட்டி அடிக்கலாம்.

20. வெள்ளைப் பூசனிக்காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய் கொத்துமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப் பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக் கொதிப்பு கொலஸ்ட்ரால் தலைசுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.

21. வால்மிளகின் தூளை சீசாவில் பத்திரப் படுத்தி வேளைக்கு ஒரு சிட்டிகை தேனில் குழப்பிச் சாப்பிட கபம் நிங்கும்.

22. ஒரு கப் சாதம் வடித்த நீரில் கால் ஸ்பூன் மஞ்சள் பொடியைக் கலந்து குடிக்க வயிற்று உப்புசம், அஜீரணம் மாறும்.

23. சாதம் வடித்த கஞ்சியை எடுத்து ஆறவைத்து ஒரு ஸ்பூன் நெய்யில் கொஞ்சம் சீரகம் கலந்து குடித்தால் இடுப்புவலி நீங்கும்.

24. அரிசியுடன் வெந்தயத்தைச் சேர்த்து கஞ்சியாக்கி காய்ச்சி உண்டு வந்தால் தாய்ப்பால் சுரக்கும்.

25. விரலி மஞ்சளை சுட்டு பொடி செய்து தேங்காய் எண்ணெயில் குழப்பி காலையிலும் இரவிலும் ஆறாத புண்களுக்கு மேல் போட்டால் சீக்கிரம் குணமாகிவிடும்.

26. கறிவேப்பிலையை அம்மியில் வைத்து அதனுடன் தேக்கரண்டியளவு சீரகத்தையும் வைத்து, மை போல அரைத்து வாயில் போட்டு தண்ணீர் குடித்துவிட்டால் வயிற்றுப் போக்கு நிற்கும்.

27. சாம்பிராணி, மஞ்சள், சீனி போட்டு கஷாயமாக்கி பாலும் வெல்லமும் சேர்த்து பருகினால் உடம்புவலி தீரும்.

28. நெருப்பு சுடுநீர் பட்ட இடத்தில் பெருங்காயத்தை அரைத்துப் பூசினால் எரிச்சல் குறையும் கொப்பளமும் ஏற்படாது.

29. வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால் நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபக சக்தியையும் உண்டாகும்.

30. பசுவின் பால் நூறு மில்லி தண்ணீரில் அதே அளவு விட்டு இதில் வெண்தாமரை மலர்களைப் போட்டுக் காய்ச்சி பாத்திரத்தை இறக்கி வைத்து அதில் வரும் ஆவியைக் கண்வலி போன்ற நோய்கள் வந்த கண்ணில் படும்படி பிடித்தால் கண் நோய்கள் அகலும்.

31. புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான் இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும் புடலங்காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையலாம்.

32. பீட்ரூட் கிழங்கின் சாற்றுடன் சிறிது தேனும் கலந்து அருந்தி வந்தால் வயிற்றுப்புண் குணமாகும்.

33. கேரட் சாறும் சிறிது தேனும் கலந்து பருகி வர கர்ப்பிணி பெண்கள் வாந்தி நிற்கும் உடல் வலுவாகும். பித்த நோய்கள் தீரும்.

34. சுக்கு மிளகு திப்பிலி தாமரை இதழ் வெல்லம் சேர்த்து தண்ணீரில் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பதைத் தடுக்கலாம்.

35. முட்டைக் கோசுடன் பசுவின் வெண்ணெய் கலந்து பாகம் செய்து சாப்பிட்டால் உடல் தளர்ச்சி விலகும்.

36. கடுக்காயை வாயில் ஒதுக்கி வைத்தால் வாய்ப்புண் ஆறும்.

37. நெருப்பில் சுட்ட வெங்காயத்தை சாப்பிட்டு வர இருமல் கபக்கட்டு முதலியன நீங்கும்.

38. பல் கூச்சம் இருந்தால் புதினா இலையை நிழலில் காய வைத்து தூள் உப்பு சேர்த்து பல் துலக்கினால் ஓரிரு நாளில் குணமாகும்.

39. படிகாரத்தை குளிக்கும் நீரில் கலந்து குளித்தாலும் வியர்வை நாற்றம் மட்டுப்படும்.

40. நெற்றியில் குங்குமம் வைத்துப் புண்ணாகி உள்ள இடத்தில் வில்வமரத்துக் கட்டையுடன் சந்தனமும் சேர்த்து இழைத்துத் தடவி வந்தால் புண் குணமாகி விடும்.

41. நீர்ச்சுருக்கு வெயில் காலத்தில் முக்கியமாக பெண்களுக்கு நீர்க்கடுப்பு ஏற்படுகிறது. இதற்கு காரணம் வெயில் காலத்தில் அதிகமாகத் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் நீர்ச்சுருக்கு ஏற்படும். தாராளமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும் பார்லி அரிசி ஒரு கைப்பிடி எடுத்து 8 தம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து ஆறிய பிறகு குடிப்பது நல்லது. இளநீரில் வெந்தயப் பொடி கலந்து குடிக்கலாம்.

42. இரவில் மூக்கடைப்புக்கு மின் விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணை பயன்படுத்தவும் மல்லாந்து படுக்கும் போது மூக்கடைப்பு அதிகமாகும். பக்கவாட்டில் படுக்கவும் காலையில் பல் தேய்க்கும்போது நாக்கு வழித்து விட்டு மூன்று முறை மாறி மாறி மூக்கைச் சிந்தவும் சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன்னோர் காட்டிய வழி இது.

43. மலச்சிக்கலுக்கு இரவில் இரண்டு வாழைப்பழம் சாப்பிடலாம். அதிகாலையில் இலேசான சுடுநீரில் அரை டீஸ்பூன் கடுக்காய்ப் பொடி சேர்த்துக் குடித்து விட்டால் பதினைந்து நிமிடங்களில் குடல் சுத்தமாகி விடும். தண்ணீர் அதிகம் குடிக்க வேண்டும்.

44. கைகளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும் கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச்சுளுக்கு உள்ள இடத்தின் மீது போடுங்கள் அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டு விடும்.

45. வேனல் கட்டியாக இருந்தால் வலி அதிகமாக இருக்கும். அதற்குச் சிறிதளவு சுண்ணாம்பும் சிறிது தேன் அல்லது வெல்லம் குழைத்தால் சூடு பறக்க ஒரு கலவையாக வரும் அதை அந்தக் கட்டியின் மீது போட்டு ஒரு வெற்றிலையை அதன் மீது ஒட்டிவிடவும்.

46. ஒரு டம்ளர் அளவு பட்டாணியை தண்ணீரில் வேகவைத்து குளிர்ந்ததும் தக்காளி சாறு சேர்த்துத் தினமும் சாப்பிட்டு வர உடல் வலுவலுப்பு பெறும்.

47. கர்ப்பிணிப் பெண்கள் அடிக்கடி இளநீர் தர்ப்பூசணி பழம் ஆகியவை சாப்பிட்டால் குழந்தை வெளுப்பாகப் பிறக்கும்.அழகாகவும் இருக்கும்.

48. சிறிது சுக்குடன் கருப்பட்டி 4 மிளகு சேர்த்து நன்கு பொடித்து2வேளை சாப்பிட்டால் அஜீரணம் குணமாகி பசி ஏற்படும்.

49. கறிவேப்பிலை சுக்கு, சீரகம் ஓமம் சேர்த்து துவையல் அரைத்து சாப்பிட்டால் அஜீரணம் சரியாகும்.

50. தேக்கரண்டி இஞ்சிச் சாறுடன் தேன் கலந்து பருகினால் ஜீரணசக்தி அதிகரிக்கும்.

51. தம்ளர் மோருடன் சிறிது தேன் கலந்து பருகினால் ஜீரணசக்தி அதிகரிக்கும்.

52. வெற்றிலை 4 மிளகு இவற்றை மென்று தின்றால் அஜீரணக்கோளாறு சரியாகும்.

53. சீரகத்தை நீரிலிட்டு கொதிக்க வைத்து அந்த சீரக நீரைக்குடித்து வர நன்கு ஜீரணமாவதோடு உடல் குளிர்ச்சியடையும்

54. ஓமம் கருப்பட்டி இட்டு கசாயம் செய்து பருகினால் அஜீரணம் சரியாகும்.

55. அருகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும்.

இயற்கை முறைக்கு மாறுவோம்! ஆரோக்கிய மாக வாழ்வோம்!

◆

சிறுகதை

வேலன் மகன்

“அய்யா! பேருந்துல என்னோட பணத்தை யாரோ திருடிட்டாங்க. நான் ஊருக்குத் திரும்பிப் போக பணமில்லை. 2 ரூபாய் இருந்தா கொடுங்க” என்று ஒவ்வொருவரிடமும் கேட்டான் ஒருவன். அவனது முகம் அவன் சொல்வதெல்லாம் உண்மை என்பது போல் இருந்தது. அந்த மனிதன் சுடர் வண்ணனிடமும் பரிதாபமாகக் கேட்டான். அவரும் தன்னிடத்திலிருந்த 2 ரூபாய நாணயத்தை அவனுக்குக் கொடுத்தார். அருகில் நின்ற ஒருவரிடமும் அந்த ஆள் இதே பல்லவியைப் பாடி இரண்டு ரூபாய் கேட்க, அந்த மனிதர் கொடுக்கவே இல்லை. இந்த ஆள் அவரை விடுவதாய் இல்லை கேட்டுக் கொண்டே இருந்தான். அந்த ஆளோ “ஒழுங்காப் போயிடு” என்று மிரட்டல் தொனியில் கூறி சினப் பார்வை பார்த்தவுடன் அவன் நகன்றான்.

சுடர்வண்ணனுக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த ஆளிடம் சற்றுமுன் ஒரு பெண் வந்து பசிக்குது ஏதாவது கொடுங்கள் என்றபோது ஐந்து ரூபாய் கொடுத்தார். இப்போது வந்து கேட்ட அந்த ஆளுக்கு 2 ரூபாய் கொடுக்காமல் திட்டி அனுப்பி விட்டாரே ஏன்? அவரிடமே கேட்கலாம் என்று அவரிடம் கேட்டும் விட்டார்.

“சிலபேரு நம்மையெல்லாம் கேணப்பயல்களுன்னு நெனக்கிறானுக. பொய் சொல்லி காச வாங்கி, கொஞ்ச நேரத்துல நமக்கு முன்னாடியே சிகரெட்டை ஊதிக்கிட்டு வரானுக! அதனாலதான் நான் கொடுக்கல. இதை யாரோ சொல்லி நான் நம்புறதா நீங்க நினைக்காதீங்க, என்னோட சொந்த அனுபவம். ஒருவன் பாவம் போல நடிச்சு காச வாங் கிட்டு கொஞ்ச நேர கழிச்சு அவன் நண்பர்களோட சிகரெட் ஊதிக்கிட்டு சிரிச்சுப் பேசிட்டுப் போறத நா பாத்தேன். அதனாலதான் இப்படிப்பட்ட ஆளுகளுக்கு நான் எதுவும் கொடுக்கிறதில்லை.” என்றார்.

# ஏமாத்தி வெளயாடுராய்ங்கடோய்!



◆

சுடர்வண்ணனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே. இவர்கள் இப்படி நடந்து கொள்வதால் உண்மையி லேயே துன்பப்படுகிறவர்களுக்கு யாரும் உதவிட முடியாத நிலை வந்துவிடுமே என்று வருந்தினார். பேசிக்கொண்டிருந்த அந்த மனிதர் எதிர்பார்த் திருந்த பேருந்து வந்ததும் அவர் ஏறிச் சென்று விட்டார். சுடர்வண்ணன், தான் செல்ல வேண்டிய பேருந்துக்காக நின்று கொண்டிருந்தார். பேருந்து வந்த பாடில்லை, சரி, யாரிடமாவது கேட்கலாம் என்று கடைகள் இருந்த பக்கம் சென்றார். அங்கே அவர் பார்த்த காட்சி அவரை திகைப்படையச் செய்தது. தன்னிடம் சற்று முன் காசு வாங்கிய அந்த ஆள் மூன்று நண்பர்களுடன் காபி குடித்துக் கொண்டு அரட்டை அடித்துக் கொண்டு நின்றான். அந்த பாவப்பட்ட முகமா இது? சுடர் வண்ணனால் அவரது கண்களையே நம்பமுடியாமல் வியப்பின் உச்சிக்கே சென்றார். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற பழந்தமிழர் அறிவுரை எவ்வளவு உண்மை என்பது அவருக்குப் புரியலாயிற்று. என்றாலும் உண்மையிலேயே துன்பப்படும் மக்கள், இப்படிப் பட்டவர்களால் பாதிக்கப்படுவார்களே என்று வருந்தினார். ◆

---

# வைரி கவிதைகள்



**குழல் விளக்கு.**

கண்ணிற்கு குளிர்ச்சி
மின்சார மிச்சம்
நிரம்பிய வெளிச்சம்
இருந்தும் ஏன்

மந்த மனிதருக்கு
என்னை ஒப்பிடுகிறார்கள்
மந்த மனிதர்கள்?

ஊடகம்
வலிமையானது.
பொய்யை
கர்ப்பம் தரித்து
பொல பொலவென
புழுக்கள் பிறக்கும்.

பொய்யனாய்
ராசபக்சே
புழுக்களாய்
துரோகத் தமிழர்கள்
அவன் தரும்
காசுக்காய்
தமிழின விரோத
திரைப்படங்கள்!

# தமிழில் பேசுவது கேவலமா?

## நடிகைகளுக்கு இயக்குனர் விக்கிரமன் கேள்வி



இயக்குனர் பாரதிராஜா அவர்களின் தம்பி ஜெயராஜ் நடிக்கும் 'மூச்' என்ற திரைப்படத்தின் பாடல் வெளியிட்டு விழா பிரசாத் கலர் லேப் வளாகத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் ஜெயராஜ் அவர்கள் பேசுகையில் தாய், இரண்டு பிள்ளைகளுக்கு இடையேயான பாசப்போராட்டம் தான் இந்த மூச் திரைப்படம் என்றார்.

வாழ்த்திப் பேசிய அகத்தியன், தயாரிப்பாளரின் பட்ஜெட்டுக்குள் படம் எடுத்துக் கொடுத்திருக்கிறார் பாரதிராஜாவிடம் உதவிஇயக்குனராக இருந்த வினுபாரதி நிச்சயம் வெல்வார்.

இப்போது தொழில்நுட்ப அறிவை வளர்த்துக் கொண்டார்கள் ஆனால் கதையை விட்டு விட்டார்கள். எங்களிடம் கதை இருக்கிறது புதிய தலைமுறையினரிடம் தொழில் நுட்பம் இருக்கிறது.

தொழில்நுட்பத்தேடு நல்ல கதையைக் கொடுத்தால் வெற்றி நிச்சயம். நீங்கள் கதையில் கவனம் செலுத்துங்கள்.

பாடல்கள் சிறப்பாக இருக்கின்றன. நானும் பாடலாசிரியர் என்பதால் சொல்கிறேன். இசையமைத்துள்ள நித்யன் கார்த்தி பாராட்டுக்குரியவர் என்றார்.

அவரைத் தொடர்ந்து பேசிய அமீர் பேய்க்கும் மூடு சாங்குக்கும் என்ன தொடர்பு என்றே தெரியவில்லை. பேய் கற்பனையான ஒன்று தான். அப்படி ஒன்று இல்லவே இல்லை. பேய் என்று ஒன்று இருந்தால் அது மிகவும் பயந்த உயிரினம் என்றுதான் சொல்ல வேண்டும். பகலில் வராது, நாலு பேர் கூட்ட மாக இருந்தால் வராது, யாராவது தனியாகப் போனால் தான் அவரை அடிக்கும். பேய் என்பது மூட நம்பிக்கைதானே தவிர உண்மையல்ல என்றார்.

டிரைலர் நன்றாக இருந்தது. கவர்ந்தது. படத்தொகுப்பு, இசை சிறப்பாக அமைந்திருக்கிறது என்றார்.

இயக்குனர் விக்கிரமன் அவர்கள் வாழ்த்திப் பேசிய போது, இயக்குனர் பாரதிராஜா அவர்களின் பள்ளியில் இருந்து வெளிவந்த இயக்குனர்கள் எல்லோரும் வெற்றியாளர்களாகத்தான் இருக்கிறார்கள். சமீபத்தில் வெளிவந்த சலீம் படத்தின் இயக்குனர் நிர்மல் உட்பட. அந்த வரிசையில் வினுபாரதியும் வெற்றி பெறுவார்.

இந்தப் படத்தின் கதாநாயகி பெங்காலைச் சேர்ந்தவர், கதாநாயகன் கேரளத்தைச் சேர்ந்தவர் என்றாலும் இவர்கள் தமிழில் பேசியது நல்லதொரு புதிய தொடக்கம். தமிழைத் தாய்மொழி யாகக் கொண்ட நடிகைகள் தமிழில் பேசுவதில்லை!

தமிழில் பேசுவது கேவலமா? தமிழில் பேச என்ன தயக்கம்? ஆந்திராவிலோ, கர்நாடகத்திலோ, கேரளாவிலோ வேற்று மொழிகளில் பேசினால் ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா? ஏற்றுக் கொள்ள மாட் டார்கள். தமிழ் நடிகைகள் தமிழில் பேசவேண்டும் என்றார்.

**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்.**




இந்திய சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளின் கூட்டமைப்பின் துணைத்தலைவர் சதாசிவத்துடன் நல்லெண்ண வேர்கள் இதழின் ஆசிரியர் கிறிஸ்டோபர், முற்றம் இதழின் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி, மதிஒளி இராஜ்குமார் ஆகியோர்.




இந்திய சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளின் கூட்டமைப்பின் தலைவர் புஷ்பா பாண்டே அவர்களுக்கு முற்றம் இதழின் ஆசிரியர் விசவனூர் வே. தளபதி அவர்கள் பொன்னாடை போர்த்தினார். அருகில் தமிழக துணைத்தலைவர் பி. எம். பாலா. மற்றும் அகில இந்திய நிர்வாகிகள்.




இந்திய சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளின் கூட்டமைப்பின் தலைவர் புஷ்பா பாண்டே அவர்கள் தமிழ்நாட்டின் தலைவரான சண்முகவேல் அவர்களுக்கு மாலை அணிவிக்கிறார்.

இந்திய சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளின் கூட்டமைப்பின் INDIAN FEDERATION OF SMALL AND MEDIUM NEWSPAPERS கூட்டம் சென்னையில் தமிழ்நாடு தலைவர் சண்முகவேல் அவர்கள் தலைமையில் நடந்தது. இந்தக் கூட்டமைப்பின் அகில இந்தியத் தலைவர் புஷ்பா பாண்டே, பொதுச் செயலாளர் தியாகராஜா, துணைத்தலைவர் சதாசிவம் உட்பட பல வெளி மாநில நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர பத்திரிகைகளுக்கான சலுகைகளை அரசுகளிடம் இருந்து பெறுவது பற்றியும், அரசு விளம்பரங்களைப் பெறுவது பற்றியும், பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் பற்றியும் பேசப்பட்டது. தமிழகத்தின் தலைவராக சண்முகவேல் அவர்களும் துணைத் தலைவர்களாக பி.எம்.பாலா அவர்களும், செயலாளராக ராஜேந்திரன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வந்திருந்தவர்களுக்கு நினைவுப் பரிசுகள் கொடுக்கப்பட்டு சிறப்புச் செய்யப்பட்டனர். இந்தக்கூட்டமைப்பில் இதழ் ஆசிரியர்களும் வெளியீட்டாளர்களும் உரிமையாளர்களும் மட்டுமே உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுகின்றனர்.

அமல்ராஜ்

இமயவரம்பன்

# பத்திரிகையாளர்கள் ஏமாற்றப்பட்டார்களா?


தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம்
TAMILNADU UNION OF JOURNALISTS
No.112, New MLA Hostel, Govt. Estate, Chennai - 600 002.

பல ஆண்டுகளாக டி யு ஜெ (தமிழ்நாடு யூனியன் ஆஃப் ஜெர்னலிஸ்ட்) என்ற பத்திரிகை யாளர்கள் அமைப்பு செயல்பட்டு வந்தது. அந்த அமைப்பு தற்போது மூன்று பிரிவுகாகப் பிரிந்து, நாங்கள்தான் உண்மையான அமைப்பு என்று கூறி செயல்பட்டு வருகிறார்கள்!.

இச்சூழலில் அந்தப் பிரிவுகளில் ஒரு பிரிவின் தலைவர் திரு. ஜார்ஜ் அவர்கள் ஒரு செய்தியையும் அதற்கான ஆதாரங்களையும் தந்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், செரப்பணஞ்சேரி ஊராட்சிக்கு உட்பட்ட ஆரம்பாக்கம் கிராமத்தில் 10 ஏக்கர் நிலம் அரசின் பரிந்துரையின் பேரில் குறைந்த விலைக்கு வாங்கப் பட்டதாகவும் அதை 200 பத்திரிகையாளர்கள் பகிர்ந்து கொண்டதாகவும் ஆனால் இதில் மிகப் பெரிய மோசடி நடந்திருக்கிறது என்றும் கூறினார்.

நிலம் வாங்கிய தொகைக்குமேல் சுமார் மூன்று மடங்கு அளவிற்கு பணம் பெறப்பட்டு நிலம் தந்ததற்கான கடிதம் கொடுக்கப்பட்டதில் தவறு இருப்பதாக அறிந்த ஜார்ஜ் அவர்கள் அதைப்பற்றி ஆதாரங்களைத் திரட்டிய போது பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்ததாகக் கூறினார்.

மேற்கண்ட அந்த நிலம்பற்றி தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 இன் படி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பதில் தந்திருக்கிறது. அதில் "காஞ்சி புரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், செரப் பணஞ்சேரி கிராமத்தில் 10 ஏக்கர் நிலம் பத்திரிகை யாளர்களுக்கு பட்டா வழங்கக் கோரி மனு செய்தது தொடர்பாக பார் 2இல் காணும் வட்டாட்சியர் அறிக்கையின் பேரில் எனதறிக்கையினை பின்வருமாறு சமர்ப்பிக்கிறேன்.

திருப்பெரும்புதூர் வட்டத்தில் பத்திரிக்கை யாளர்கள் சங்கம் கோரியுள்ள இடமானது நெ.162 ஆரம்பாக்கம் கிராமத்தினைச் சார்ந்ததாகும். புல எண்.211 1 மொத்தப் பரப்பு 94.69.5 ஹெக்டேர் புறம்போக்கு நிலம் ஆரம்பாக்கம் கிராம ஏரி என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் புல எண். 213 1ஏ1ஏ மொத்தப் பரப்பு 46.63.0 ஹெக்டேர் நிலம் "மேய்க்கால் புறம்போக்கு" என கிராமக் கணக்கு களில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி இடம் "நீர்நிலை புறம்போக்கு" என்பதால் நாளது தேதி வரை இப்புலங்கள் தமிழ்நாடு பத்திரிக்கையாளர் கள் சங்கத்திற்கு நில ஒப்படை மற்றும் பட்டா ஏதும் வழங்கப்படவில்லை" என்று பதிலைப் பெற்றிருக் கிறார் ஒரு பிரிவின் தலைவர் ஜார்ஜ்.

இந்த இடத்திற்கு பட்டா தரவேண்டும் என்று அப்போதைய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர் களுக்கு ரவீந்திரதாஸ் கடிதமும் எழுதியிருக்கிறார்.

இது தவிர பத்திரிகையாளர்களுக்காக பட்டா நிலங்கள் வாங்கப்பட்டு அவைகள் வெளியாருக்கு விற்கப்பட்டிருப்பதாகவும் நிலவணிகத்தை பத்திரிகையாளர் சங்கத்தின் அப்போதைய தலைவர் நடத்தியதாகவும், பட்டா இடங்களில் இன்னும் சில இடங்கள் விற்கப்படாமல் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

பத்திரிகையார்கள் விவரமானவர்கள் என்று மக்களால் கருதப்படும் நிலையில், அவர்களிடமே தில்லுமுல்லு செய்யப்பட்டிருப்பது வியப்பாக இருக்கிறது. 'இந்து' பத்திரிகையின் தொழிலாளர்களும் இச்சங்கத்தின் உறுப்பினர்கள் என்ற தகுதியில் செரப்பணஞ்சேரியில் இடம் வாங்கியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

பல விபரங்களோடும், ஆதாரங்களோடும், தலைவராக இருந்த ரவீந்திரதாஸ் மகன் சுபாஷ், அவரது துணைவி, துணைத்தலைவராக இருந்த புருசோத்தம்மன், நிர்வாகியாக இருந்த மீனா, முத்து ஆகியோர் மீது வழக்குத் தொடர்ந்திருப்பதாகவும் ஜார்ஜ் கூறினார்.

◆

## குழந்தை

பிள்ளைகள் தரும்
தொல்லைகள்
பெறாமல்
இருந்திருக்கலாமோ?
என எண்ணுகிற
சமுதாயத்திற்குள்
ஆயிரம் தொல்லைகள்
செய்யட்டும்
எனினும்
என்மடியில்
எப்போது
என் குழந்தை?
என ஏங்கும்
இளைய சமுதாயமும்
வாழ்கிறது.

**மெஞ்ஞானி**

## மனிதம்

மனிதரில்
பெண் ஆண்
பேதமை எதற்கு
உடலில் மாற்றங்கள்
இருந்தாலும்
உணர்வுகள்
ஒரே தன்மையதே
ஆணுக்கு உரிமை
பெண்ணிற்கு இல்லை
பெண்ணிற்கு உரிமை
ஆணுக்கு இல்லை
ஒரு சார்பு வேண்டாம்
மனிதம் என்று ஒன்றே
மலரும் நாளே நன்னாள்

**காட்டான்**

## நல்லாசிரியை

பெண்ணல்ல பெண்ணல்ல
நீங்கள் ஒரு பேரழகு,
கண்ணல்ல கண்ணல்ல
அது ஒரு கவியழகு
என்சொல்ல வார்த்தைகள்
போதவில்லை
கடமையில் கருணையில்
எத்தனை கம்பீரம்
கடலாய் தெரியுது உங்களிடம்
பார்த்தால் பசி தீரும்
பேசினால் பிணி தீரும்
பகலிலும் நிலவென உங்கள் முகம்
பேரொளி வீசும் தினம்
என்ன நடை என்ன உடை
அத்தனை அழகும் ஓரிடம்
அது எல்லாமே உள்ளது தங்களிடம்
தேவதையின் திறமைகளுக்கு
தேவைகள் குறைவதில்லை
பட்டாம்பூச்சியாய் சிறகடித்து
பாரினில் புகழ் பெற
இந்த பாமர பெண்ணின் சிறுபுகழாஞ்சலி

**-திலகா**
எம்.எம்.டி.ஏ. காலனி, சென்னை.

சிறுகதை

# சோத்துக்குச் செத்தவன்

இருங்கோவேள்

பரமனுக்கு அந்தப் பழக்கம் எப்படி வந்தது என்று அவனுக்கே தெரியவில்லை. சிறுவயதிலும் அவனுடைய குடும்பம் ஏழ்மையாகத்தான் இருந்தது. ஊரில் கூழ் குடிக்கும் குடும்பங்களில் இவனது குடும்பமும் ஒன்று. அந்த நாட்களில் கூழ் என்பது மிகவும் ஏழ்மையில் உள்ளவகளின் உணவாக கருதப் பட்டது. அரிசிச் சோறு சாப்பிடுபவர்கள் பணக் காரர்கள் என்ற எண்ணம் பரவிக்கிடந்தது. பரமனுக்கு கூழ் குடிப்பது என்றால் முற்றிய வேப்ப இலையைத் தின்பது போலத்தான். வேறுவழியில்லையே என்று சில வேளைகளில் மூக்கைப் பிடித்துக் கொண்டு வயிற்றை நிரப்பிக் கொள்வான்.

“உங்கள் மகன் நன்றாகப் படிக்கிறான்” என்று ஆசிரியர்கள் கூறியும் கூட அவனை உயர்நிலைப் பள்ளியில் அவனது அப்பா சேர்க்கவில்லை. காரணம் ஏழ்மை. விவசாய வேலைகள் முதலாக எங்கு வேலை கிடைக்கிறோ, எந்த வேலை கிடைக்கிறதோ அங்கே சென்று வேலை செய்வான். படித்தால் மட்டும்தான் சம்பாதிக்க முடியுமா? நானும்தான் சம்பாதிக்கிறேன் என்பான். படிக்க வேண்டும் என்ற ஆசை மனதிற்குள் அலை அலையாய் எழுந்த போதும் குடும்பச் சூழல் கருதி, அதை வெளியில் சொல்வதில்லை. வேலைக்குச் செல்லும் காலங்களில் கூட கூழைத்தான் மதிய உணவுக்காக கொண்டு செல்வான். சில வேளைகளில் வேலை செய்யும் இடங்களில் சோறு போடுவார்கள். அன்று அவனுக்கு கொண்டாட்டம் தான். நன்றாகச் சாப்பிடுவான். வீட்டில் என்றாவது சோறு சமைத்தால் மற்றவர்களைவிட தனக்கு அதிகம்



வேண்டும் என்று கேட்டு உண்ண முடியாமல் உண்ணுவான்.

நன்றாகச் சம்பாதித்தான். ஒரு தொழிலையும் ஆரம்பித்துவிட்டான். இரண்டு ஆட்களுக்குச் சம்பளம் கொடுத்து வேலைக்கும் வைத்துக் கொண்டான் என்றாலும் சாப்பாட்டில் மட்டும் அவனது மனம் ஏனோ அலைபாய்ந்து கொண்டே இருந்தது.

ஒரு நாள் பரமனின் தாய் அவனுக்கு நல்ல சமையல் செய்து வைத்துவிட்டு, பரமனின் தந்தைக்கு உடல் நலம் சரியில்லாததால் அவரை அழைத்துக் கொண்டு அருகில் இருந்த நகரத்திற்குச் சென்று விட்டார். மதியம் வீட்டிற்குச் சாப்பிட வந்த பரமன் சட்டி களைத் திறந்து பார்த்தான். திறந்ததும் கம கம வென்ற வாசனை அவன் மூக்கைத் துளைத்தது. தண்ணீர்கூட எடுத்து வைத்துக் கொள்ளாமல் சோற்றை குவியலாகப் போட்டு குழம்பு ஊற்றி சாப்பிட ஆரம்பித்தான். அவன் சோறு சாப்பிட ஆரம்பித்தால் முதலில் ஆவேசமாக உணவை அள்ளி அள்ளித் தின்பான். அவனது அம்மா பல முறை கூறியிருக்கிறாள், "சோறு ஓடிப்போகாதுடா மெதுவாகச் சாப்பிடு" என்று. ஆனால் அவன் காதுகள் அந்த வார்த்தைகள் கேட்டதே இல்லை. அதே ஆவேசத்தோடு இப்போதும் அள்ளி அள்ளி உண்டான். தொண்டையில் சோறு அடைத்துக் கொண்டு மூச்சு விட முடியாமல் இறந்தே போனான் பரமன்.

சாப்பிடச் சென்ற முதலாளியைக் காணவில்லையே என்ற பதைப்பிலும், தொழில் செய்யும் இடத்தைப் பூட்ட வேண்டுமே என்ற நினைவிலும் வேலைக் காரரில் ஒருவன் பரமன் வீட்டிற்கு வந்து பார்த்த போது, பரமன் பரலோகம் போய்விட்டது தெரிந்தது. இறந்த காரணமும் அனைவருக்கும் புரிந்து விட்டது.

ஒருவர் சொன்னார் "நல்லா சம்பாதித்தான். ஆனால் சோற்றைக் கண்டால் மட்டும் காணா ததைக் கண்டு விட்டவன் போல ஆகிவிடுவான். அந்தச் சோறே அவனுக்கு எமனாகிப் போய்விட்டது. சோத்துக்காகச் செத்தவன் இவன் மட்டும்தான் என்பதல்ல. உலகத்தில் பல பேர் சோறே கிடைக் காமல் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இவன் கிடைத்த சோற்றை இயல்பாகச் சாப்பிடாமல் அவசரப்பட்டுச் சாப்பிட்டுவிட்டு இப்படி அற்ப அகவையில் போய்ச் சேர்ந்துவிட்டானே" என்றார். ◆

---

# தமிழிசைக் கல்லூரியில் நிர்வாகச் சீர்கேடு

சென்னை, பாரிமுனை இராஜா அண்ணாமலை மன்றத்தில் இயங்கி வரும் தமிழிசைக் கல்லூரியில் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் நடந்து வருவதாக அங்கிருப்போரும், வெளியில் இருந்து அதைக் கவனிப்பவர்களும் சொல்கிறார்கள். மாணவர்களின் சேர்க்கை குறைந்து வருவதாகவும் மாணவர்களுக்கு கொடுக்கப்படும் கல்வி உதவித்தொகை மாணவர்களுக்குச் சென்று சேர்வதில்லை என்றும் கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு எம்.ஏ., (இசை) பட்டம் பெற்ற ஏழுமலை என்ற மாணவர் 80 விழுக்காடு மதிப்பெண் எடுத்து தேறியிருக்கிறார். அங்கு கொடுக்கப்பட்ட சான்றிதழில் முதல் வகுப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் வகுப்பு என்பதற்குப் பதிலாக சிறப்பு நிலை என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கல்லூரியின் ஆண்டறிக்கையை வாசித்த கல்லூரி முதல்வர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதலிடம் பெற்ற மாணவர் என்று ஏழுமலையின் பெயரை வாசித்திருக்கிறார். ஆனால் சான்றிதழில் முதல் வகுப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக பல்கலைக்கழகத்தில் கேட்டபோது "நீங்கள் இரண்டு செமஸ்டர்களையும் சேர்த்து எழுதிய தால் சிறப்புநிலை (அ) கோல்டு மெடல் தரஇயலாது என்று கூறிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. மேலும் இது முழுக்க முழுக்க உங்கள் கல்லூரியின் தவறே தவிர, எங்கள் தவறு இல்லை என்று கூறிவிட்டார்களாம்.

இத்தகவலை முறையாக தமிழிசைக் கல்லூரிக்கு எடுத்துச் சென்றும் எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் சான்றிதழில் எவ்வித மாற்றத்தையும் செய்யாமல் முன்னர் கொடுக்கப்பட்ட சான்றிதழையே கொடுத்திருக்கி றார்கள். மாணவர்களின் படிப்பிற்கு உரிய தகுதிச் சான்றிதழைத்தராமல் நிர்வாகம் தான்தோன்றித் தன மாக செயல்படுவது மாணவர்களிடையே படிப்புத் திறனை குறைத்துவிடும் என்பதை நிர்வாகம் புரிந்து கொண்டு தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்கின்றனர் விபரமறிந்தவர்கள்.

— உமா மகேஸ்வரி

பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி
எம்.ஏ.,எம்.ஏ.,எம்.எட்.

# முல்லை நீதான்!



உன்னழகை நான்கண்டு மகிழ வேண்டி
உறவெல்லாம் மகிழ்ந்திட்டார்! காலங் கண்டார்!
துன்பமிலா வகையினிலே மணம் முடித்தார்!
சொந்தந்தான்! உறவே! தான்! என்று சொல்லி
என்றென்னை! பொலிவினையே நீயுங் காட்ட
ஏக்கமெனை விட்டதடி! உளங்க வர்ந்த
பொன்னிநான் "முதலிரவு" சுவைக்க வந்தே
பொறுத்திருந்தேன்! இசைந்திட்டாய்! முல்லை நீதான்!

பஞ்சணையில் படுத்திருக்க கனியும் பாலும்
பாவைநீ ஏந்திவந்து நிலமும் நோக்க
வஞ்சியுன்றன் வதனமெனும் முக மேதான்!
வடிவழகைக் காட்டுதுடி! பேச வில்லை!
கொஞ்சிடவே! நானெண்ணிக் கட்டி யுன்னைக்
கரமிடையில் சிறைபிடித்தேன்! பூத்த பூவை
குஞ்சரத்தில் சூட்டிட்டேன்! கன்னி யங்கே!
கொதித்திருந்தாய்! செங்கதிராய்! முல்லை நீதான்!

கள்ளவிழிப் பார்வையினால் கதைகள் பேசி
கன்னியுன்றன் மடிமீதே படுத்து றங்க
உள்ளங்கை தேனேபோல் நீயும் நானும்
உடனுறைந்து வாழ்ந்திருப்போம்! உனது நெஞ்சை
அள்ளித்தந் துயிர்காக்கும் கருணை தன்னால்
அணங்கே! நம் காலமெலாம் களித்திருப்போம்!
பள்ளத்து நீரருவிப் பாய்தல் போல
பாசத்தைப் பாய்ச்சிடுவாய்! முல்லை நீதான்!

சிரித்துவரும் தென்றலெனும் தேரேறிப் போகச்
சேர்ந்திருக்கத் தெய்வந்தான்! துணையுஞ் செய்ய
அதிதாகத் திரண்டிருக்கும் மதுவை உண்ண
அழகே! உன் இதழிடையே இதழை வைத்து
உரிமையோடு இணைந்திருந்தோம்! பற்கள் தோய
உடலெல்லாம் சிலித்திருந்தோம்! தடையே யில்லை!
எரிக்கின்ற நெருப்பானாய்! இன்பங் காண
தந்திழையே குளிர்கோட்டாய்! முல்லை நீதான்!

கொய்யாத அரும்பினிடை ஊருந் தேனை
கொடுத்துநின்ற இதழ்காட்டி அரவ ணைக்கச்
செய்யாத செய்கையொன்றும் செய்ய வில்லை
திருத்தியென்றன் ஆடைதனைப் பூட்டி விட்டு
உய்யாத சிலையாக நீயுஞ் சாய
உன்னருகில் அமர்ந்திருந்தேன்! மெல்ல! மெல்ல!
நையாத என்னுயிரும் உன்னை யெண்ணி
நெக்குருகக் காரணந்தான்! முல்லை நீதான்!

◆



# உண்மையைத் தேடி

இராசீவ் காந்தி கொலைசெய்யப்பட்டது யாரால்? என்ற கேள்விக்கு உண்மையான விடை இதுவரை கிடைக்கவில்லை. காரணம் விடுதலைப் புலிகள் மீது அந்த பழியை சுமத்திவிட்டு, செய்தவர்கள் சுகமாக இருக்கிறார்கள். அக்கொலை தொடர்பாக நாம் இன்னொரு ஐயத்தையும் எழுப்புகிறோம்.

இத்தொடரின் இரண்டாவது அத்தியாயத்தில் இலங்கை அரசை சந்தேகித்து அவர்கள் மீது ஏன் விசாரணையை மேற்கொள்ளவில்லை என்று கேள்வி எழுப்பி இருந்தோம். இலங்கை அரசுதான் கூலிப்படையை ஏவி இராசீவ் காந்தியைக் கொன்றிருக்க வேண்டும் என்று சந்தேகத்தையும் எழுப்பியிருந்தோம். அந்தச் சந்தேகம் வலுப் பெறுவதற்கு அண்மைக் காலங்களில் நடந்து வரும் நிகழ்வுகள் ஆதாரமாக நிற்கின்றன.

சென்னையில் ஐ எஸ் ஐ பாகிஸ்தான் உளவாளிகள் தமிம் அன்சாரி கைது செய்யப் பட்டுள்ளான். அவனுடன் இலங்கையைச் சேர்ந்த ஜாகிர் உசேன், அவனது கூட்டாளியான சிவபாலன், சலிம்ரபிக் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு செயல் பட்ட முகம்மது உசேன் என்ற உளவாளி மலேசியாவில் கைது செய்யப்பட்டுள்ளான். இந்நிலையில் கடந்த செப்டம்பர் 10ஆம் தேதி, சென்னை, சாலிகிராமத்திலுள்ள முத்தமிழ் நகரில் இலங்கையைச் சேர்ந்த அருண் செல்வராஜனை உளவுத்துறை தந்த தகவலின் அடிப்படையில் தேசிய புலனாய்வுப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

அருண் செல்வராஜனை விசாரித்ததில், பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் கடல் வழியாக மும்பை நகருக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்தியது போல் நமது நட்பு நாடு என்று இந்திய அரசால் வர்ணிக்கப்படும் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்குள் ஊடுருவி சென்னை மற்றும் தமிழகத்திலுள்ள பழங்கோயில்கள், துறைமுகங்கள், தலைமைச் செயலகம், வெளிநாட்டுத் தூதரகங்கள், அணுமின் நிலையங்கள், சென்ட்ரல் ரயில் நிலையம், அரசுப்

5 • இராஜாசிங்

பொது மருத்துவமனை போன்ற 20 இடங்களில் தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதலை நடத்த இலங்கை அரசு கூலிப்படையைத் தயார் படுத்தி யுள்ள செயல் அருண் செல்வராஜன் மூலம் தெரிய வந்துள்ளது.

முன்பொருமுறை சுப்ரமணியசாமி சட்டத்துறை அமைச்சராக இருந்த போது பாதகச் செயல் நடந்தது. இப்போதும் அவர் நடுவண் அரசில் முக்கியப் பங்கு வகிக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இலங்கை அரசு அன்று இருந்த இந்திய ஆட்சியாளர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, இலங்கையிலிருந்து கூலிப்படையை அனுப்பி இராசீவைக் கொலை செய்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் தானாகவே எழுகின்றது. அந்தக் கொலையை இலங்கை அரசு, சிங்களர்களுக்கு இணையான அதிகாரம் பெற்று இலங்கையில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று ஆயுதம் ஏந்திப் போராடிய இளைஞர் கூட்டத்தின் மீது சுமத்தி அவர்களை அழித்தது.

இலங்கை அரசு அப்பாவித் தமிழர்களை ஒடுக்குவதற்காகவும் அழிப்பதற்காகவும் அவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு மின்சாரம், பெட்ரோல், மண்ணெண்ணை, உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் செல்வதைக்கூட தடை செய்தது. ஆனால் ஆயுதம் ஏந்திப் போராடிய அந்தத் தமிழ் இளைஞர் கூட்டம் தங்களுக்குத் தேவையான அத்தியா வசியப் பொருட்களை, தமிழகத்திலிருந்து அவர்கள் வாழும் பகுதிக்கு யாருக்கும் தெரியாமல் கொண்டு சென்றனர். இதனால் அவர்களை சிங்கள அரசு கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆகவே அத்தமிழ் இளைஞர்களை அழிக்க இலங்கை அரசு தமிழகத்தில் இராசீவ் கொலையை அரங்கேற்றியிருக் கிறது. பழியை விடுதலைப்புலிகள் மீது போட்டு விட்டது. தங்களது வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொடுக்கும் தமிழகத்திற்கு தங்களால் அவப் பெயரோ பாதகமோ வருவதற்கு அவர்கள் எப்படி துணை நின்றிருக்க முடியும்? கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தில் விடுதலைப் புலிகளால் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் அங்கிருந்து தாங்கள் உயிர்வாழ்வதற்கான அத்தியாவசிப் பொருட்கள் வராது போய்விடும் என்று விடுதலைப் புலிகளுக்குத் தெரியாதா? அதை அவர்கள் செய்வார்களா?

இலங்கையின் சதி வேலைக்கு ஆதரவு கொடுக்க சுப்ரமணியசாமியின் ஆலோசனையின் பேரில் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழு தமிழகத்திலி ருந்து எந்த ஒரு பொருளும் தமிழர்கள் வாழும் பகுதிகளுக்குள் எடுத்துச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியது. இன்று சுப்பிரமணியசாமியின் ஆலோ சனை வேறு உருவங்களில் வெளியாகிறது என்பதற்கு அருண்செல்வராஜ் போன்ற கூலிப்படையினர் கைது சான்றாக விளங்குகிறது. இப்போது இந்தியா விலும், உலகத்தில் பல்வேறு இடங்களிலும் தமிழ் என்ற மொழியால் ஒன்றிணைந்த மக்கள், 2009 ஆம் ஆண்டு இன அழிப்புப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவும் ஊக்கமும் கொடுத்து வருகின்ற னர்.

இது இலங்கை அரசுக்கு அச்சத்தையும் கொதிப் பையும் ஏற்படுத்தி உள்ளது. எனவே அவர்கள் இராசீவ் காந்தியைக் கொன்றபோது என்ன உத்தியைக் கடைபிடித்தார்களோ அதே உத்தியை இப்பொழுதும் கடைபிடித்துள்ளனர் என்பது அருண் செல்வராஜன் பிடிபட்டதன் மூலம் நமக்கு நன்கு தெரியவருகின்றது.

அன்று சுப்பிரமணியசாமி சட்டத்துறை அமைச்சர். இன்று நடுவண் அரசில் முக்கியப் பங்கு வகிப்பதாகச் சொல்கிறார். இன்றைய பாரதப் பிரதமருக்கு ஆலோசனை வழங்குபவன் என்று ஊடகங்களுக்கு பேட்டி அளித்துள்ளார் என்பது இங்கு உற்று நோக்கத்தக்கதாகும்.

அருண் செல்வராஜனின் வாக்குமூலத்திலிருந்து இலங்கையின் கூலிப்படையை தமிழகத்தினுள் அனுப்பி ஒருசில அப்பாவி நிரபராதிகளான இரண் டாம், மூன்றாம் கட்டத் தலைவர்களுடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டு அவர்களுடன் போட்டோ எடுத்துக் கொண்டு தமிழகத்திலுள்ள தேசியத் தலை வர்கள் மற்றும் தமிழகக் கட்சிகளின் முன்னணித் தலைவர்களைக் கொன்று அப்பழியை அப்பாவி இலங்கைத் தமிழர்கள் மீது போட்டு இந்தியாவி லுள்ள தமிழர்களையும் ஒதுக்கி வைத்து, இலங் கைத் தமிழர்களுக்கு உலக அளவிலும் இந்திய அளவிலும் உள்ள அனைத்து ஆதரவுகளையும் முற்றிலுமாக நிறுத்தவும், இலங்கையை சிங்களநாடு என்று அறிவிப்பதற்கான இராசபக்சே செய்யும் சூழ்ச்சிதான் இது.

இச்செயல், இப்போது உள்ள நடுவண் அரசுக்கு

நன்கு தெரியும். நடுவண் அரசில் முக்கியப் பங்காற்றும் சுப்பிரமணிய சாமி இச் செயலைச் செய்து கொண்டிருக்கிறார் என்பது நம்மால் உணர முடிகிறது. இவரது வேலையே இரண்டகம் செய்வது தான்.

இந்திய அரசு, சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரை தூக்கிலிடுவதற்கான முயற்சியை மேற்கொண்ட போது, அதைத் தடுத்து நிறுத்த தமிழ் நாடும், தமிழக மக்களும் இணைந்து செயல் பட்டனர். அதில் புதிய தலைமுறைத் தொலைக் காட்சி மிகச் சிறப்பாக தன் பங்கினை ஆற்றிக் கொண்டிருந்த வேளையில், அதில் ஒளிபரப்பான நேரடி விவாதத்தில் ஐயா சுப. வீரபாண்டியனையும், சுப்பிரமணியசாமியையும் பேட்டி கண்டபோது தமிழகமே ஒன்று திரண்டு, அம்மூவரையும் தூக்கிலிடும் முயற்சியை தடுக்கும் செயல்பாட்டைக் கண்ட சுப்ரமணியசாமி தன் பேச்சுத் திறமையால் அந்த நேரடி விவாதத்தின் நோக்கத்தையே வேறு வடிவிற்கு மாற்றினார். ஆனால் சுபவீ அவர்களோ தன் திறமையான பேச்சாலும் புத்திக் கூர்மையாலும் விவாதத்தை சரியான பாதைக்குத் திருப்பி வெற்றி கண்டார்.

மூவரின் தூக்கும் தடுத்து நிறுத்தப்பட்டது. அதே முறையைத்தான் சு. சாமி இன்றும் கையாளுகிறார். இலங்கை அரசின் கூலிப்படையினை தமிழகத்திற் குள் இறக்கி இந்தியாவில் தமிழர்களை கொலை செய்து அவர்களது பொருளாதாரத்தையும், மன அமைதியையும் குலைப்பதற்கான செயலில் ஈடு பட்டு, அதைச் செயல்படுத்தும் விதமாக இலங்கைக் குச் சென்று இலங்கை அரசைத் தூண்டி, மீனவர் பிரச்சனையை உருவாக்கி, மக்களின் கவனத்தையும் அரசியல்வாதிகளின் கவனத்தை யும் அதிகாரிகளின் கவனத்தையும் திசை திருப்பும் செயலில் ஈடுபட்டுள் ளார்.

இந்திய அரசு, தீவிரவாதிகளை கைது செய்து சுமார் பத்து மாத காலமாக, இலங்கைக்குச் சென்று விசாரிப்பதற்கான அனுமதி கேட்டும் இன்றுவரை அனுமதி கிடைக்கவில்லை. ஆனால் சுப்பிரமணிய சாமிக்கோ பலமுறை இலங்கை சென்று தமிழர் களுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பியுள்ளார். ஆனால் தீவிரவாதிகளை (கூலிப்படையை) விசாரிப் பதற்கு மட்டும் அனுமதி வழங்கவோ, அதைப்பற்றி விசாரிக்கவோ இல்லை. எந்த நாடாயினும் தீவிரவாதிகளை நம் நாட்டிற்கு அனுப்புமாயின் அது எவ்வாறு நமக்கு நட்பு நாடாக இருக்க முடியும்.

ஈராக் தீவிரவாதத்தை ஊக்குவிக்கிறது என்று அமெரிக்கா கருதினால், ஈராக்கின் மேல் அமெரிக்கா போர் தொடுக்கிறது. இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீனம் தீவிரவாதத்தை உருவாக்குகிறது என்று எண்ணினால் இஸ்ரேல் பாலஸ்தீனம் மீது படை எடுக்கிறது. ஆனால் சிங்கள அரசு தமிழ் மொழி பேசும் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து, இனப் படுகொலையைச் செய்து, அங்கு வாழ்வதற்கு வழி இல்லாமல் தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களைப் பிடித்து அவர்களை மூளைச் சலவை செய்து கூலிப்படையாக மாற்றி, அவர்களை இந்தியாவிற்குள் அனுப்பி இந்திய ஒருமைப்பாட்டை அழிக்கும் வேலையைச் செய்ய, ஒரு கருவியாக பயன்படுத்தி வருகிறது. இவ்வாறு இலங்கை அரசு தீவிரவாதத்தை ஊக்கிவிக்கிற நாடாக இருந்தும் அதன் மீது இந்தியா போர் தொடுக்காதது ஏன்?

சீன அரசு இந்தியாவின் மீது போர் தொடுப்ப தற்கான சூழலை ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் வேளையில், இந்தியாவில் உள்ள தமிழர்களை அழிப்பதற்கு இலங்கை திரிகோண மலையில் இராணுவ தளம் அமைக்க அனுமதி கொடுத்திருக் கிறது இலங்கை. சீனப் போர்க்கப்பல்கள் தங்கு தடையின்றி வந்து செல்ல இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் அனுமதி கொடுத்து இந்திய நலனுக்கு எதிராகச் செயல்படும் இலங்கை அரசை நட்பு நாடு என்று கூறும் மர்மம்தான் என்னவோ? நேற்று மறைமுகமாக நடுவண் அரசு தமிழர்களை இலங்கை கயில் கொன்று குவித்தது. இன்று இந்தியாவில் வாழும் தமிழர்களை கொன்று குவிக்கும் முயற்சிக்கு மறைமுகமாக செயலாற்றுகிறதோ தெரியவில்லை.

இராசீவ் கொலையில் இலங்கைக்குச் சென்ற விசாரணைக் குழுவிற்கு கொலையாளிகள் என்று சொல்லப்பட்டவர்களின் போட்டோ, அவர்கள் தங்கியிருந்த இடத்தின் விபரம் அனைத்தும் கொடுக்கப்பட்டது.

இதில் என்ன வியப்பு என்றால், தமிழர்கள் வாழும் பகுதி, இந்திய அமைதிப்படை இலங் கையை விட்டு வெளியே சென்ற உடன் எல் டி டி ஈ அமைப்பினரால் தனி நாடுபோல் பிரகடனம் செய்யப் பட்டு, தனியாக தபால் நிலையம், நீதிமன்றம், காவல்துறை, வரிவசூல்துறை, வங்கிகள் என்று பலதுறைகள் செயல்பட்டு வந்தது. அப்படி இருக்கும் பட்சத்தில் இவர்களுக்கு எப்படி

சிவராசன், ஆதிரை, சுபா, தனு போன்றோர் எல். டி டி. ஈ யில் இருந்த புகைப்படம் கிடைத்தது? அப்படியே உளவுத் துறைமூலமாக கிடைத்தது என்றால் 2009ஆம் ஆண்டு சுமார் லட்சத்திற்கும் மேலான மக்கள் ஒன்று திரண்ட போது எல். டி. டி. ஈ அமைப்பினரை மாத்திரம் தனியாகப் பிரித்து எடுத்து இருக்கலாமே? ஏன் குழந்தைகள், முதியோர், பெண்கள் என கொன்று குவித்தான் இராசபக்சே. அப்படி என்றால் இது ஒரு இனஅழிப்பு என்று தானே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது. இவ்வாறு இந்திய நலனுக்கு எதிராகச் செயல்பட்டு இந்தியா வில் உள்ள தமிழர்களையும் அழிக்கத் துடிக்கும் ஒரு நாட்டை இந்தியா நட்பு நாடாக எண்ண லாமா? இது இந்தியாவின் இறையாண் மைக்கு அழகா?

கைது செய்யப்பட்டுள்ள அருண்செல்வராஜன், இந்திய ராணுவ வீரர்களுடனும் பாதுகாப்பு நிறைந்த துறைமுகம் மற்றும் தலைமைச் செயலகம், இரண்டாம், மூன்றாம் கட்ட கட்சித்தலைவர் களுடனும் ஏற்படுத்திக் கொண்ட நட்பு, போர் ஒத்திகை நிகழ்வுகளின் படம் என்று பல உளவு வேலைகளைச் செய்து இலங்கைக்கு கொடுத்துள் ளான். இவனை இயக்கிய தீவிரவாத நாடான இலங்கை இந்தியாவையும் உலகத்தையும் ஏமாற்றி தமிழர்களை அழிக்கும் வேலையை தொடர்ந்து செயல்படுத்த முயற்சிக்கிறது.

இராசீவ் கொலையில் தொடர்புடைய கூலிப் படைத்தலைவன் சிவராசன் தன்னை ஒரு பத்திரிகை யாளன் என்று அடையாளம் காட்டிக் கொண்டு அதற்கான அடையாள அட்டையையும் வைத்திருந் தான். இன்று அருண்செல்வராஜனும் அதே முறை யைக் கையாண்டிருக்கிறான். அன்று சிவராசன் காங்கிரஸ் தலைவருடனும், அவரது குடும்பத்தாரு டனும் நெருங்கிய தொடர்பு வைத்து இருந்தான். இன்று அருண் செல்வராசனும் பல அரசியல்வாதி களுடனும் புகைப்படம் எடுத்திருக் கிறான். அன்று சிவராசன் விடுதலைப் புலிகளுடனும் புலிக்கொடி யுடனும் இருந்து புகைப்படம் எடுத்திருக்கிறான். இன்று அருண் செல்வராசனும் இந்திய ராணுவ வீரர்களுடனும் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக் கிறான்.

இந்தப் புகைப்படத் தின் மூலம் பின் நாட்களில் விசாரணையின் போது குழப்பம் ஏற்படுத்த முடியும். அருண் செல்வராசன் நடவடிக்கைகள் சிவராசனை ஒத்து இருக்கின்றன. இராசீவ் காந்தியை கொன்ற கொலையாளியை விசாரிக்கச் சென்ற இந்திய அதிகாரிகளின் குழுவை வரவேற்று விடுதலைப் புலிகள் எனக்கூறி சிவரா சனிடம் முன்பே இலங்கை அரசு பெற்றுக் கொண்ட புகைப்படத்தை கொடுத்து அனுப்பினர். இன்று இலங்கை அரசின் கூற்றுப்படி விடுதலைப்புலிகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு விட்டார்கள். இதனால் இலங்கை அரசு விடுதலைப் புலிகள் எனக்கூற முடியாத நிலை. மேலும் துர திர்ஷ்டவசமாக மாஸ்டர் பிளான் செய்த அருண் செல்வராஜன் மாட்டிக் கொண்டான். இதனால்தான் இந்திய அரசு பத்துமாதமாகக் கேட்டும் இலங்கைக் குச் சென்று தீவிரவாதம் பற்றி விசாரிக்கும் விசார ணைக்கு இலங்கை அரசு அனுமதி தராமல் உள்ளது.

சிவராசன் கர்நாடகாவில் (கோனேகுண்டேயில்) தொழில் அதிபர் வீட்டில் தஞ்சம் புகுந்து இருந்தான். தொழில் அதிபர் அவருக்கு வாடகைக்கு வீடு கொடுத்ததாகக் கூறும் கார்த்திகேயன், அந்த வீட்டை இடைத்தரகர் மூலம் பெற்றதாகக் கூறு கின்றார். ஆனால் இடைத்தரகருக்கும் சிவராசனுக் கும் உள்ள தொடர்புகளை வெளிப் படுத்த வில்லை. இடைத்தரகர் கைது செய்யப்பட வில்லை. இன்று அருண் செல்வராசனும் இன்று தமிழ்நாட்டில் அமைதியாக தொழில் செய்பவர் போல் நடித்து, பலரின் நேரடி நட்பைப் பெற்றுள் ளான். இவ்வாறு தான் சிவராசனும் தமிழகத்தில் தொழில் செய்து இருப்பான். இதை அதிகாரிகள் மறைத்து உள்ளனர். விடுதலைப்புலிகள் என நம்ப வைப்பதற்காக சன்முகம் பண்ணையாரைக் கொலை செய்தும் உள்ளனர். முந்தைய பதிப்பில் இதில் ஏற்பட்ட முரண்பாட்டை எழுதியிருந்தோம்.

எவ்வாறு சிவராசன் இலங்கையின் கூலிப்படை யாகச் செயல்பட்டு ராசீவ் காந்தியைக் கொன் றானோ, அதே போல் அருண் செல்வராசனும் அதே பாணியைப் பின்பற்றி இந்தியாவைச் சுற்றி வந்துள்ளான். இவர்கள் இருவரின் நடவடிக்கை களும் ஒரே மாதிரியாக இருப்பதால் ஒரே இடத் திலிருந்து, ஒரே பயிற்சி பெற்று வந்துள்ளனர் என்று தெளிவாகத் தெரிகிறது.

அருண் செல்வராசன் எப்படி உருவாகி, இந்தியாவிற்குள் வந்து சேர்ந்தான்? பாகிஸ்தான் ஐ எஸ் ஐ உளவுத் துறையினரோடு எப்படித் தொடர்பு ஏற்பட்டது? பாகிஸ்தான் அரசு, தீவிரவாதிகளை இலங்கை வழியாக இந்தியாவிற்குள் ஊடுருவச்

செய்கின்றனர் என்று கூறி இருப்பது குறிப்பிடத் தக்கது. பாகிஸ்தான் அரசு இலங்கையில் உள்ளவர்களைத்தான் தீவிரவாதிகளாக மாற்றி இந்தியாவிற்குள் அனுப்புகின்றது என்பது கவனிக்கத்தக்கதாகும். ராசிவ்காந்தியைக் கொன்றவர்களின் புகைப் படத்தை முன்கூட்டியே உளவுப்படையால் பெற்று இருந்த இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் செய்யும் செயல் அந்தத் திறமையான உளவுத்துறைக்கு எப்படி தெரியாமல் போனது? பத்து மாதங்களில் இரண்டு முறை விசாரணைக்கு அனுமதி கேட்டு விண்ணப்பித்தும் எந்த ஒரு அனுமதியும் இலங்கை அரசு கொடுக்கவில்லை என்றால் அதில் மறைந்து கிடக்கும் உண்மை என்ன? இவ்வளவு கேடுகளைச் செய்யும் அண்டை நாடு, எப்படி நமக்கு நட்பு நாடாக இருக்க முடியும்? இச்செயல் இந்திய நடுவண் அரசுக்கு சந்தேகத்தையும் வியப்பையும் ஏற்படுத்த வில்லையா?

ஒரு காலத்தில அமெரிக்க அரசு, தன் ஏகாதிபத்தியைத்தை தெற்கு ஆசியாவில் நிலைநாட்டுவதற்காக, தன் ஆயுத தளத்தை இலங்கையில் உள்ள திரிகோணமலையில் நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்த போது, அன்னை இந்திராகாந்தி அவர்கள் இந்தியாவின் ஒருமைப்பாட்டையும் பெருமையையும் காப்பதற்காக இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவும் ஆயுதமும் கொடுத்தார். அதன் பயனாகத் தங்களது உரிமைக்காகப் போராடும் போராட்டக்காரர்கள், அமெரிக்க ஏகாதிபத்திய ஆதிக்கத்தை திரிகோண மலையில் அனுமதிக்கவில்லை. இலங்கையில் வாழும் தமிழர்கள் எப்போதும் எப்போதுமே இந்தியாவின் நலன் சார்ந்தே இருந்து வந்துள்ளனர் என்பது இதன் மூலம் நாம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் ராசபக்சேயும் இலங்கை அரசும், இந்தியாவிற்கு நெருக்கடி ஏற்பட்ட எல்லா நேரங்களிலும் இந்தியாவிற்கு எதிராக இருந்தனர் என்பது உலக வரலாறு. இந்த உண்மைகளையும் இந்தியாவிற்கு எதிராக எடுத்த நிலைப்பாட்டையும் ஒவ்வொரு தமிழனும் பிறருக்கு எடுத்து இயம்பி, தமிழர்களுக்கு எதிராக உருவாக்கப்படும் சதித் திட்டங்களை நாம் முறியடிக்க வேண்டும். தமிழ் மொழியால் ஒன்றுபட்ட நாம், பலமொழி வழங்கும் இந்தியத்தில், தலைநிமிர்ந்து தமிழைத் தாய்மொழியாய்க் கொண்டவர்களாக தமிழர் களாக தலை நிமிர்ந்து வாழ முயல வேண்டும்.


தேடல் தொடரும்...


மாறுகின்ற உலகத்தின் மனநிலையை
படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி
**மாற்றம் இணைய தொலைக்காட்சி**



வேர்மகள்

# மக்களாட்சியின் மகத்துவம்



தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடந்து முடிந்து, ஆளும்கட்சி வெற்றி பெற்றிருக்கிறது. இத்தேர்தலில் வலிமை வாய்ந்த எதிர்க்கட்சிகள் என்று கருதப்படுகிற உட்பட பல எதிர்க்கட்சிகள் தேர்தலில் போட்டியிடவில்லை. போட்டியில் நின்ற சில எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் மிரட்டப் பட்டோ, ஆசை வார்த்தைகள் கூறப்பட்டோ, பேரம் பேசப்பட்டோ அவர்களாகவே தேர்தல் போட்டியிலிருந்து விலகிக் கொண்டனர்.

அமைச்சர்களும் ஆளும் கட்சியில் பிற பதவிகளில் இருப்பவர்களும், தேர்தல் நடக்கும் இடங்களில் முகாமிட்டு, பணம் கொடுத்தும், மிரட்டியும் வாக்கு வேட்டையாடியதாகக் கூறப்படுகிறது. அவர்களின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு காரணமும் இருக்கத்தான் செய்கிறது. தனது பொறுப்பில் உள்ள பகுதிகளில் ஆளும் கட்சி வேட்பாளர் தோற்றுவிட்டால், பொறுப்பாக இருந்த அமைச்சரோ அல்லது முக்கியப் பொறுப்பில் உள்ளவர்களோ தங்களது பதவியினை இழக்க நேரிடும் என்பதை அவர்கள் அறிந்திருப்பதால் இத்தகைய மக்களாட்சிக்கு எதிரான செயல்களைச் செய்து தத்தமது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். கட்டுப்பாடான, அதிகாரம் குவிக்கப் பட்ட ஒற்றைத் தலைமை அவர்களுடையது என்பதை அவர்கள் அறிந்திருப்பதால் வெற்றி பெற வேண்டும் என்ற ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்றனர்.

உள்ளாட்சித் தேர்தல்களிலும் சரி, இடைத் தேர்தல்களிலும் சரி தமிழ்நாட்டில் ஆளும் கட்சி தான் வெல்லும் என்ற எழுதப்படாத சட்டம் நிறை வேறி வருகிறது. தற்போதுள்ள ஆட்சிதான் இப்படி நடக்கிறது என்பதல்ல, கடந்த ஆட்சியிலும் இதுபோல் நடந்ததுதான். தமிழகத்தில் உள்ள இரு பெரும் கட்சிகள் மாறி மாறி இச்செயலைச் செய்து கொண்டுதான் இருக்கின்றன.

உள்ளாட்சித் தேர்தல்களிலும் இடைத் தேர்தல் களிலும் ஆளுங்கட்சியை எதிர்த்து முக்கியமான எதிர்க்கட்சிகள் போட்டியிடுவதில்லை என்ற காட்சி, கட்சி வேறுபாடின்றி தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கிறது. எதிர்க்கட்சிகளாகிய நாம் வெற்றி பெற முடியாது, என்பதை எதிர்க்கட்சிகளே ஒத்துக்கொண்டு, வேண்டாம் இந்த பணச்செலவு விளையாட்டு என்று ஒதுங்கிக் கொள்கின்றன.

இம் மாதிரியான மனநிலை எல்லாக்கட்சிகளிடமும் காணப்படுகிறது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் சரியான கூட்டணி கிடைக்காமல் தனித்துப் போட்டி யிட்ட காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு மிக்க தலைவர்கள் தேர்தலில் நிற்காமல் தங்களது செல்வத்தை? பாதுகாத்துக் கொண்ட மக்களாட்சி செயல்பாடுகள் எல்லாம் நடந்ததை எல்லாரும் அறிவர்.

ஆனாலும் வெகுசில கட்சிகள் தோற்போம் என்று தெரிந்தும் போட்டியிடுகின்றன. காரணம் தங்களது இயல்பான செல்வாக்கை விட கொஞ்சம் கூடுதலான வாக்குகளைப் பெற முடியும் என்பதால். அதற்கு வேறு நிறைய காரணங்கள் உள்ளன என்பது எல்லோருக்கும் தெரியும் என்றாலும் "நாங்கள் செல்வாக்குப் பெற்றுவிட்டோம்" என்று தம்பட்டம் அடித்துக் கொள்வதற்காகவும் இது போன்ற நேரங்களில் தேர்தலில் சிலகட்சிகள் நின்று தோற்கின்றன.

நடந்து முடிந்த தேர்தல்களில் 50க்கும் குறைவான விழுக்காடு வாக்குகளே பதிவாகியுள்ளன. பாதிப்பேர் வாக்களிக்கவில்லை. இது ஆரோக்கியமான நிலையா? மக்களிடமும் ஒருவிதமான சலிப்புத் தன்மை தோன்றிவிடுகிறது. எப்படி இருந்தாலும் ஆளுங்கட்சிதான் வெல்லப்போகிறது. இதற்கு ஏன் நாம் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிக்க வேண்டும் என்று எண்ணிவிடுகிறார்கள். அதோடு பிற கட்சிகளுக்கு வாக்களித்து அவர்களை வெற்றி பெறச் செய்தால், நடக்கின்ற ஒரு சில நற்காரியங்களும் நடக்கமால் போய், நமது பகுதி வளர்ச்சியடையாமல் போய் விடும் என்ற அச்ச உணர்வும் பொதுமக்கள் மத்தியில் காணப்படு கிறது

உள்ளாட்சித் தேர்தல் என்பது ஆளும் கட்சிகளில் உட்கட்சித் தேர்தல்களைப் போல், கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இப்படிப்பட்ட நிகழ்வுகள் மக்களாட்சிக்கு முற்றிலும் எதிரானவை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு கட்சியும் தாங்கள் ஆட்சியில் இருக்கும்போது மக்களாட்சிக்கு எதிரான உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி வெற்றி பெற்றுவிட்டு, எதிர்க்கட்சியாக மாறிய பின், இது மக்களாட்சிக்குக் கேடான செயல்பாடு என்கின்றன. இது சரியானது அல்ல. இது தொடர்ந்தால் மக்களாட்சிக்கு இருக்கின்ற மகத்துவம் மங்கி மறைந்து காணாமல் போய்விடும். ◆

---

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

முற்றம் இதழ், தொடர்ந்து உங்கள் வீட்டு முற்றம் வந்து சேர, உடனே சந்தா செலுத்துங்கள். அலைபேசி, குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலமாகவும் எங்களை அழைத்து உங்களை முற்றத்தின் சந்தாதாரராக பதிவு செய்து கொள்ளலாம். 8056281973, mutram2010@gmail.com. முற்றம் திங்களிதழை முழுவதும் இணையதளத்திலும் நீங்கள் படிக்கலாம். இணைய தள முகவரி www.mutram.in

உங்களது எழுத்தாக்கங்களை அஞ்சல் மூலம் எங்களுக்கு அனுப்புங்கள். உங்களது படைப்புகளை மாற்றவோ, திருத்தவோ, நீக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.



Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**



INVERTER
HURRY
LIVE DEMO
WITH MORE RANGES
POWER CUT ?
NO PROBLEM !
Price Starts @ 9999*
* Conditions apply
மின்சார தடையா ?
இனி கவலை வேண்டாம் !
• Free Home Delivery • Fast Installation
Solar water heater & Solar Inverters also available
One Stop Solution For Your Power Needs
GBS POWER SOLUTIONS
A Division of GBS Systems & Services Pvt Ltd
9841603390
9092919293
KK Nagar | Anna Nagar | OMR | Tambaram | Adyar | Velachery | Madipakkam | Madurai | Coimbatore

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

# முற்றம்

ஒரு மன்றம்
இரண்டு மணி நேரம்
மூன்று விழாக்கள்....

முற்றம் விருது விழா
நூல் வெளியீட்டு விழா
முற்றம் ஆண்டு விழா



இதழியல் களத்தில்
இலக்கு
நோக்கிச் செல்வோம்!

அனைவரும் வாரீர்!